விலை ரூபா: 5.00

பக்கங்கள்:-பத்து

Registered as a News paper in Sri Lanka

# வலம்புரி
# VALAMPURI

சங்கு 03 வள்ளுவர் ஆண்டு 2033 ஆடி 22 புதன்கிழமை (07.08.2002) தொலைபேசி 3378 ஒலி 231

மங்கையர் மனம் கொள்ளை கொள்ளும் தங்க நகைகளுக்கு



சாரங்கா நகை மாடம்

177/4, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

T.P:- 2480

## பொதுத் தேர்தலுக்கு ஐ.தே.முன்னணிக்குள் எதிர்ப்பு

# அரசியல் நெருக்கடிக்கு தீர்வுகாண விரைவில் ஜனாதிபதியை சந்திப்பேன்

## முடிவு சாதகமில்லையெனில் பொதுத் தேர்தல் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கா அறிவிப்பு

(நமது நிருபர்)

**நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்காவிற்கும் ஐ.தே.முன்னணி அரசிற்கும் இடையே ஏற்பட்டுள்ள அதிகாரப் போட்டியை புரிந்துணர்வு மூலம் தீர்ப்பதற்காக பிரதமர் ரணில் விக்கிரமசிங்கா ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்காவை சந்திக்க உள்ளார்.**

ஜனாதிபதிக்கும் ஐக்கிய தேசிய முன்னணி அரசிற்கும் இடையே ஏற்பட்டுள்ள அதிகாரப் போட்டி நாட்டில் ஸ்திரமற்ற அரசியல் நிலை ஒன்றினை தோற்றுவித்துள்ள நிலையில் அரசாங்கம் பாராளுமன்றக் குழுக் கூட்டத்தை பிரதமர் ரணில் விக்கிரமசிங்கா நேற்று கூட்டியிருந்தார்.

நாடு அவசரமானதொரு பொதுத் தேர்தலை சந்திப்பதற்கு தயாராக இல்லாது விட்டாலும் இன்றைய அரசியல் நெருக்கடிக்கு தீர்வு காண்பதற்கு ஜனாதிபதி இணக்கம் தெரிவிக்காத பட்சத்தில் பொதுத் தேர்தல் நடைபெறுவதை தடுக்க முடியாது.

கடந்த பொதுத் தேர்தலில் ஐக்கிய தேசிய முன்னணிக்கு மக்கள் ஆட்சி அதிகாரத்தை கொடுத்தது போல் ஜனாதிபதிக்கும் மக்கள் தங்களது ஆணையை கொடுத்துள்ளார்கள். இந் நிலையில் மக்கள் ஆணை பெற்ற இரு சாராரும் புரிந்துணர்வோடு நடந்துகொள்ளவேண்டும். இதனையே நாட்டு மக்களும் இன்று எதிர்பார்க்கின்றார்கள் என்று உறுப்பினர்களுக்கு பிரதமர் ரணில் விக்கிரமசிங்கா விளக்கிக் கூறினார்.

பாராளுமன்றத்தைக் கலைத்து விட்டு பொதுத் தேர்தல் தற்போதைய சூழ்நிலையில் நடத்துவது உசிதமல்ல

(10ம் பக்கம் பார்க்க)

## ஈ.பி.டி.பியின் அலுவலகங்களை சோதனை இடுவதற்கு நீதிபதி அனுமதி

(திருநெல்வேலி)

ஊடகவியலாளர் நிமலராஜன் படுகொலை தொடர்பான வழக்கு விசாரணை நேற்று யாழ் நீதிமன்றில் நடைபெற்றது.

இந்த விசாரணையின்போது ஈ.பி.டி.பி. அமைப்பின் யாழ் மாவட்ட அலுவலகத்தையும் ஊர்காவற்றுறை அலுவலகத்தையும் சோதனை இடுவதற்கு குற்றத் தடுப்பு பொலிசாருக்கு நீதிவான் இ.த. விக்னராஜா அனுமதி வழங்கியுள்ளார்.

மேற்படி வழக்குத் தொடர்பாக கைது செய்யப்பட்டுள்ள ஈ.பி.டி.பி அமைப்பின் உறுப்பினர் முரளி கொடுத்த வாக்குமூலத்திற்கு அமைவாக அவர்களது இரு அலுவலகங்களையும் சோதனையிட அனுமதிக்குமாறு குற்றத் தடுப்புப் பிரிவு பொறுப்பதிகாரி ரஞ்சித் சில்வா நீதிவானிடம் கோரியதற்கு அமைவாகவே இந்த அனுமதி வழங்கப்பட்டுள்ளது.(த-6-43)

## ஈழத் தமிழர்களை பிரிட்டன் நாடு கடத்துகிறது

(கொழும்பு)

பிரிட்டனில் அரசியல் தஞ்சம் கோரி நிராகரிக்கப்பட்ட நூற்றுக்கணக்கான இலங்கையரை நாடு கடத்துவதற்காக பிரிட்டனில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

இத் திட்டத்தின் கீழ் நீர்வேலியைச் சேர்ந்த நந்தகுமார் என்பவர் நேற்று கொழும்புக்கு திருப்பியனுப்பப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை கடந்த சில தினங்களுக்கு முன்னர் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த மீரா, கொழும்பைச் சேர்ந்த ரேவதி, அச்சுவேலியைச் சேர்ந்த பத்மரூபன் ஆகியோர் பிரிட்டனில் இருந்து திருப்பியனுப்பப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இது இவ்வாறிருக்க இலங்கைக்கு திருப்பியனுப்புவதற்காக பிரிட்டனில் தடுத்து வைக்கப்பட்டோர் விபரம்

(10ம் பக்கம் பார்க்க)

**உள்ளே!**

**தரம் 5 மாணவர்களுக்கான புலமைப் பரீட்சை மாதிரி வினாத்தாள்**

## அமைச்சர் ரவூப் ஹக்கீம் விரைவில் பிரதமரைச் சந்திப்பார்

(கொழும்பு)

முஸ்லிம் மக்களின் பாதுகாப்பு மற்றும் அவர்களின் உரிமைகள் குறித்தும் நாட்டின் தற்போதைய அரசியல் நிலைப்பாடு குறித்தும் ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் தலைவரும் அமைச்சருமான ரவூப் ஹக்கீம் இவ்வார இறுதியில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்காவை சந்தித்து பேச்சு நடத்தவுள்ளார்.

இச்சந்திப்பின்போது கிழக்கு மாகாண முஸ்லிம்கள் உட்பட நாட்டின் பல்வேறு பிரதேசங்களிலும் பரவி வாழும் முஸ்லிம் மக்களின் பாதுகாப்புக் குறித்து விசேடமாக ஆராயப்படும் என்று தெரிவிக்கப்படுகிறது.

அத்துடன் தாய்லாந்தில் அரசுக்

யைச் சேர்ந்த நந்தகுமார் என்பவர் நேற்று கொழும்புக்கு திருப்பியனுப்பப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

கவும் தெரிவிக்கப்படுகிறது.

இது இவ்வாறிருக்க இலங்கைக்கு திருப்பியனுப்புவதற்காக பிரிட்டனில் தடுத்து வைக்கப்பட்டோர் விபரம்

(10ம் பக்கம் பார்க்க)

**தரம் 5 மாணவர்களுக்கான புலமைப் பரீட்சை மாதிரி வினாத்தாள்**

லங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் தலைவரும் அமைச்சருமான ரவூப் ஹக்கீம் இவ்வார இறுதியில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்காவை

காப்புக் குறித்து விசேடமாக ஆராயப்படும் என்று தெரிவிக்கப்படுகிறது.

அத்துடன் தாய்லாந்தில் அரசுக்

(10ம் பக்கம் பார்க்க)

# ஜனாதிபதியின் கடமைகளுக்கு இடையூறு விளைவிக்கக் கூடாது

## அமைச்சர் ஹக்கீம் உரை

(கொழும்பு)

ஜனாதிபதியாக இருந்தாலும் அவரும் மக்களால் தெரிவு செய்யப்பட்டவரே. அவரது கடமைகளுக்கு எவரும் இடையூறு விளைவிக்காமல் அவர் தனது கடமைகளைச் செய்வதற்கு அனுமதிக்க வேண்டும் என்று ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவரும், அமைச்சரும் ஆன ரவூப் ஹக்கீம் நேற்று பாராளுமன்றத்தில் தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றத்தில் நேற்று இடம பெற்ற புலமைப் பரிசில் தொடர்பான விவாதத்தில் உரையாற்றும்போதே அமைச்சர் ரவூப் ஹக்கீம் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அங்கு அவர் மேலும் பேசுகையில்:

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் பிரதமருக்கு பூரண ஆதரவு வழங்கும் அதேவேளை முஸ்லிம் காங்கிரஸ் ஒரு தனிக் குழுவாகவே செயற்படவுள்ளது. பொதுத்தேர்தல் ஒன்று

(10ம் பக்கம் பார்க்க)

### வை.கோ, நெடுமாறன் கைதைக் கண்டித்து

# யாழ்ப்பாணத்தில் இன்று மாபெரும் கண்டனப் பேரணி

(யாழ்ப்பாணம்)

ம.தி.மு.க. பொதுச் செயலாளர் வை. கோபாலசாமி, தமிழர் தேசிய இயக்கத் தலைவர் பழநெடுமாறன் ஆகியோரை தமிழ் நாடு அரசு கைது செய்ததைக் கண்டித்தும், இருவரையும் விடுதலைசெய்யக்கோரியும், இன்று யாழ்ப்பாணத்தில் மாபெரும் கண்டனப் பேரணி நடைபெறவுள்ளது.

வலிகாமம் தென்கிழக்கு பொது ஜன அமைப்புக்களின் ஒன்றியத்தினால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள இக் கண்டனப் பேரணி முற்பகல் 10 மணிக்கு பரமேஸ்வராச் சந்திக்கு அருகில் உள்ள ஆலடிச் சந்தியில் ஆரம்பமாகி யாழ். மத்திய பஸ் நிலையத்தில் நிறைவுபெறும்.

இப் பேரணியில் குடாநாட்டு மாணவர்கள், பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள், கட்சிப் பிரமுகர்கள், தனியார் அரச ஊழியர்கள் மற்றும் பொது மக்கள் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு ஏற்பாட்டாளர்கள் அழைப்பு விடுத்துள்ளனர்.(இ)

ஹற்றன் நஷனல்
சுபாசிறி
சொந்த தேவைகளுக்கான கடன் திட்டம்
உங்களுக்கென்றே வடிவமைக்கப்பட்ட, உங்கள் தேவைகளுக்கெல்லாம் கைகொடுக்கும் தனிப்பட்ட கடன் திட்டம்

இதோ! உங்கள் உற்றதுணையான சுபாசிறி கடன் பற்றிய விபரங்கள்

* ரூ. 25,000/- முதல் ரூ 400,000/- வரை கடன் வசதி பெறலாம்
* மூன்று வருடங்கள் வரை மீளச் செலுத்தும் வசதி
* கவர்ச்சிகரமான வட்டி வீதம்
* எழுத்து வேலைகள், பத்திரப்படுத்தல்கள் குறைவு

மேலதிக விபரங்களுக்கு HNB யாழ்ப்பாணக் கிளையை நாடுங்கள்

ஹற்றன் நஷனல் வங்கி
உங்கள் முன்னேற்றத்தின் பங்காளி

யாழ்ப்பாணக் கிளை
இல. 212, 214, ஆஸ்பத்திரி வீதி,
தொலை பேசி :- 021 - 2787, 021 - 3463
தொலை நகல் :- 021 - 3194,

[C/4634]

# செல்வச் சந்நிதி முருகன் நாளை கொடியேற்றம்

(யாழ்ப்பாணம்)

தொண்டமானாறு செல்வச்சந்நிதி முருகன் ஆலய வருடாந்த மஹோற்சவம் நாளை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகிறது.

எதிர்வரும் 18ஆம் திகதி கைலாச வாகனத் திருவிழாவும், 21ஆம் திகதி புதன் கிழமை தேர்த்திருவிழாவும் மறுநாள் தீர்த்தத்திருவிழாவும் இடம்பெறவுள்ளன.

(ஷ-43)

# எதிர்ப்புப் பேரணியில் கலந்துகொள்ள அழைப்பு

(யாழ்ப்பாணம்)

ஈழத்தமிழ்மக்களின் விடுதலைக்காக குரல்கொடுத்த தமிழகத் தலைவர்களான வை.கோபாலசாமி,பழ.நெடுமாறன் ஆகியோரின் கைதைக் கண்டித்தும் இருவரையும்உடனடியாக விடுதலைசெய்யக் கோரியும் இன்று யாழ்ப்பாணத்தில் இடம்பெறும் மாபெரும் எதிர்ப்புப்பேரணிக்கு தமிழ்தேசிய கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர்கள் கட்சிஉறுப்பினர்கள், யாழ் மாவட்ட பொதுஅமைப்புக்கள், வணிகவர்த்தக நிறுவனங்கள், கூட்டுறவுத்துறை ஊழியர்கள் மற்றும்தொழிற் சங்க உறுப்பினர்கள் அனைவரையும் ஆதரவுவழங்குமாறு வலிதென்கிழக்கு பொது அமைப்புக்களின் ஒன்றியத் தலைவர் சி.வி.கே.சிவஞானம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

(இ)

# தென்மராட்சி மக்கள் நலச்சேவைச் சங்கம் மறியல் போருக்கு ஆதரவு

(யாழ்ப்பாணம்)

தென்மராட்சி கிழக்குமக்களால் இன்று முன்னெடுக்கப்படும் மறியற் போராட்டத்துக்கு தென்மராட்சி மக்கள் நலச்சேவைகள் சங்கம் தனது பூரணஆதரவைத் தெரிவித்துள்ளது இதுகுறித்து அச்சங்கம் வெளியிட்டுள்ள பத்திரிகைக்குறிப்பில்,

2000ஆம்ஆண்டு தமது இருப்பிடங்களை விட்டு உடுத்த உடையுடன் வெளியேறிய இம்மக்களுக்கு தமது இடங்களைப் பாரப்பதற்குக் கூட இன்னும் அனுமதி வழங்கப்படவில்லை புரிந்துணர்வு உடன்படிக்கையின் பின்னர் தென்மராட்சியில் மக்கள் படிப்படியாகக் குடியேறி வருகின்ற நிலையில் எழுதுமட்டுவாழ்வடக்கு தெற்கு மிருசுவில் படித்த மகளிர்குடியேற்றம்,ஒட்டுவெளி, கரம்பகம் பழையவாய்க்கால் போன்ற பிரதேசமக்கள் அவர்களது வாழ்விடங்களுக்குச் செல்லவிடாது தடுக்கப்பட்டுள்ளனர்- இது புரிந்துணர்வு ஒப்பந்தத்திற்கு முரணாக அமைவதுடன் அம்மக்களின் அடிப்படை உரிமைகள் மறுக்கப்படுவதாகவும் அமைந்துள்ளது.

இம்மக்கள் தங்கள் வாழ்விடங்களுக்குச் சென்று மீளவும் வாழ்வதற்கான நிலைமைகள் அங்குஇருக்கின்றபோதும் இராணுவம் உயர் பாதுகாப்பு வலயம் என்ற போர்வையில் அவர்களுக்கு அனுமதி மறுத்துள்ளதுடன் அப்பிரதேசங்களில் உள்ள வீடுகளையும் பயன்தருமரங்களையும் நாளுக்குநாள்அழித்தும் வருகின்றது.

எம்மக்களின் இயல்புவாழ்க்கையை தோற்றுவிப்பதற்காக செய்துகொள்ளப்பட்ட புரிந்துணர்வு உடன்படிக்கைக்கு அமைய அம்மக்களை தமதுசொந்த இடங்களில் வாழவும் தொழில் செய்யவும் அனுமதிப்பதே நீதியானதாகும்.எனவே தமதுஉரிமைகளைப் பெறுவதற்காக இம்மக்கள் மேற்கொள்ளும் நீதியான மறியற் போராட்டத்துக்கு தென்மராட்சி நலச்சேவைகள் சங்கம்தமதுபூரண ஆதரவைத் தெரிவிப்பதுடன் சங்க உறுப்பினர்கள் அனைவரையும் இப்போராட்டத்தில்கலந்து கொள்ளுமாறும் வேண்டுகோள் விடுத்திருப்பதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

(உ)


## அரசாங்க அறிவித்தல்

சுகாதார சேவைகள் மாகாணப்பணிப்பாளர்

பணிமனை,

**கூறுவிலை கோரல்**

பருத்தித்துறை,ஆதார வைத்தியசாலையில் அமைந்துள்ளகழிவுகளைஎரிக்கும்கூடத்திற்கு(INCINERATOR) தேங்காய் மட்டை, தேங்காய் சிரட்டை, பிளாஸ்ரிக் பைகள் வழங்குதல்.

மேற்கூறப்பட்ட பொருட்களை வழங்கக் கூடியவர்களிடம் இருந்து கூறுவிலைகள் என்னால் 21 08.2002ந் திகதி நண்பகல் 12.30 மணி வரை ஏற்றுக்கொள்ளப்படும். விண்ணப்பப்படிவங்கள் 20 08.2002ஆந் திகதி பிற்பகல் 03-30 மணிவரை இப்பணிமனையில் பெற்றுக்கொள்ளலாம்.

கூறுவிலை உறையில் இடதுபக்க மேல்மூலையில் 'பருத்தித்துறை, ஆதார வைத்தியசாலைக்குக் கழிவுகள் எரிக்கும் கூடத்திற்குப் பொருட்கள் வழங்கல்' எனக்குறிப்பிட வேண்டும்.

நன்றி

வைத்தியகலாநிதி உ. சிவபாதசுந்தரம்
மாகாணப் பிரதிப் பணிப்பாளர்,
சுகாதார சேவைகள், யாழ்ப்பாணம்.

இலக்கம்: 1/8, கற்பகவிநாயகர் வீதி,
நல்லூர்,
யாழ்ப்பாணம்.

(கி-4819)


# உயர் பாதுகாப்பு வலயத்தை அகற்றுவது பாதுகாப்புக்கு ஆபத்து

## கூட்டமைப்பிடம் மொறகொட

(கொழும்பு)

வடக்கு கிழக்கு மாகாணங்களில் இராணுவக் கட்டுப்பாட்டுப் பிரதேசங்களில் உள்ள உயர் பாதுகாப்பு வலயப்பிரதேசங்களில் மக்களை மீளக்குடியமர்த்துவது தொடர்பாக அமைச்சர் மலிந்த மொறகொடவை தமிழ்க் கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர்கள் நேற்று சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்தியுள்ளனர்.

இப் பேச்சுவார்த்தைகளின் போது அமைச்சர் மலிந்த மொறகொட அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்குமிடையில் சமாதானப் பேச்சுவார்த்தை நடைபெறுவதற்கு முன் உயர் பாதுகாப்பு வலயத்தை அகற்றுதல் பாதுகாப்புக்கு அச்சுறுத்தலாக இருக்குமென்று கூட்டமைப்பு எம்.பிக்களிடம் தெரிவித்துள்ளார்.

எனினும் இது குறித்து ஆராய்வதற்கு தானும் பாதுகாப்பு அமைச்சின் செயலாளரும் இப்பகுதிகளுக்கு நேரடியாகச் சென்று பார்வையிட்டபின் இது தொடர்பான முடிவுகளை எடுப்போம் என்றும் தெரிவித்துள்ளார்.

(ம)

# புலிகள் வசமுள்ள போர்க்கைதிகளை விடுவிப்பதில் அரசு அசமந்தம்

## சாகரவர்த்தனா கப்டன் உளக்குமுறல்

(கொழும்பு)

தென்னிலங்கை சிறைகளில் தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழீழ விடுதலைபுலிகளை விடுதலைசெய்வதன் மூலமாகவே புலிகளின் காவலில் உள்ள போர்க்கைதிகளின்விடுதலையை அரசுதுரிதப்படுத்தலாமென சாகரவர்த்தனா கப்பலின் கப்டன் சஜித்போயாகொட தெரிவித்துள்ளார்.

தமிழீழ விடுதலைப்புலிகளின் காவலில்உள்ள போர்க்கைதிகளான 7படையினரை கடந்தஞாயிற்றுக்கிழமை செய்தியாளர் குழுவொன்று சந்தித்து கலந்துரையாடிய போதே அவர்இவ்வாறு தெரிவித்துள்ளார்.

கடந்த9வருடங்களாக புலிகளின் காவலில்தாம் வாழ்ந்து வருவதாகவும் படையினர் விடுதலை குறித்த விடயத்தில் தமிழீழ விடுதலைப்புலிகளுக்கு அரசு பூரண ஒத்துழைப்பை வழங்கவேண்டும் என தாம் எதிர்பார்ப்பதாகவும் தெரிவித்த போயாகொட தங்களது விடுதலை குறித்து அரசோ அல்லது அமைச்சர்களோ எதுவித முயற்சிகளை மேற்கொள்ளாமை குறித்தும் கவலை தெரிவித்துள்ளார்'

(உ-8)

# சு. ப. தமிழ்ச்செல்வனுடன் ஜப்பான் தூதுவர் சந்திப்பு

வவுனியாவுக்கு விஜயம் செய்திருந்த ஜப்பானியத் தூதுவர் சிசிறோசுட்சுகாவும் தூதரகமுதலாவது செயலாளர் மொறிக்கேஇசக்கியும் விடுதலைப்புலிகளின் பிரதேசத்திற்கு நேற்று விஜயம் செய்துள்ளனர்.

வன்னிக்குவிஜயம் செய்துள்ள இவர்கள் நேற்று முற்பகல் 10.00மணிக்கு கிளிநொச்சியில் உள்ளவிடுதலைப்புலிகளின் நடுவப்பணியக மாநாட்டுமண்டபத்தில் தமிழீழ விடுதலைப்புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வனைச் சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்தியுள்ளனர்.

(ம)

# தமிழக மறத் தமிழர்களின் கைதை மிகவும் வன்மையாக கண்டிக்கிறது

## தீவக மக்கள் நலன் காப்பகம்

(யாழ்ப்பாணம்)

ஈழத் தமிழருக்கு ஆதரவு தரும் தமிழக மறத் தமிழர்களைக் கைது செய்தமையை வன்மையாகக் கண்டிக்கின்றோம்.

'பொடா' சட்டத்தின் கீழ் தமிழக அரசினால் கைது செய்யப்பட்டு சிறை வைக்கப்பட்டிருக்கும் ம.தி.மு.க பொதுச்செயலாளர் வை. கோபாலசாமி மற்றும் தமிழ்த் தேசிய இயக்கத் தலைவரும் தீவிர தமிழினப் பற்றாளருமான பழ நெடுமாறன் ஆகியோர் கைது செய்யப்பட்டிருப்பதைக் கண்டித்து தீவக மக்கள் நலன் காப்பகம் தமிழக முதல்வருக்கு அனுப்பி வைத்துள்ள கடிதத்தில் இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அக்கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது;

ஈழப் போராட்டம் நசுக்கப்பட்ட ஈழத் தமிழரின் உரிமைப் போராட்டம் இந்த போராட்டத்தை இன்றுவரை தமது இனத்தின் விடுதலையை முழு மூச்சாகக் கொண்டு தம் இன்னுயிர்களை தியாகம் செய்து எந்தவிதஅரசியல் இலாபமும் தேடாது இதய சுத்தியுடன் நடத்தி வருபவர்கள் விடுதலைப் புலிகள் தமிழ்த் தாய்மாரின் பிள்ளைகள் தமிழ் மக்களின் காவலர்கள் அவர்கள்.

இத்தனை காலமும் தமிழ் இனத்தின் மீது கட்டவிழ்த்து விடப்பட்ட வன்முறைகளிலிருந்து தமிழ்மக்களை இன்றுவரை காத்து இன்று இரத்தம் சிந்திய வரலாற்றுப் பின்னணியில் விடுதலைப் புலிகள் சமாதானப் பேச்சின் மூலம் தமிழர்களின் அபிலாசைகளையும் உரிமைகளையும் வென்றெடுக்கும் முயற்சிகளில் ஈடுபட்டுள்ளனர்.

இப்படியான சோகமும் அவலமும் நிறைந்த ஈழ மக்களின் வரலாற்றில் ஈழ மக்களின் அவலக்குரலை செவிமடுக்காது தமிழக அரசு ஏனோதானோ என்றநிலைப்பாட்டில் இருந்து வந்தது. ஆனால் சமாதான முயற்சிகள் உருவகிக்கும் வேளை தனது அதிகாரங்களைப்பயன்படுத்தி விடுதலைப் புலிகளுக்கு எதிராக சட்ட சபையில் தீர்மானம் நிறைவேற்றியுள்ளது.

அது மட்டுமல்லாது ஈழத் தமிழரின் உற்ற உறவென சொல்லக்கூடிய தமிழகத்தில் இருந்து ஈழத் தமிழரின் அவலங்களை களைய எமது மக்களின் காவலர்களான விடுதலைப் புலிகளையும் ஈழ மக்களையும் ஆதரித்த குரல்களை சிறையிட்டுள்ளது தமிழக அரசு.

எந்தக் குற்றமும் இழைக்காத மறத்தமிழன் வை. கோபாலசாமியையும் அவரது சகாக்கள் எண்மரையும் சிறையிட்டு ஈழத் தமிழருக்கு ஆதரவான குரல்களை அடக்கியும் ஈழத்தமிழரிற்கு எதிராக தீர்மானம் நிறைவேற்றியும் அற்ப அரசியல் லாபம் கருதி முழுத்தமிழினத்தையுமே குழிதோண்டிப் புதைக்கும் முயற்சியில் தமிழக அரசு ஈடுபட்டுள்ளது.

இவ்வரிசையில் மீண்டும் ஈழத்தமிழருக்கு ஆதரவாக குரல் கொடுத்த தமிழ் தேசிய இயக்கதலைவரும் தீவிர தமிழ் பற்றாளருமான இன்னுமொரு மறத் தமிழன் பழ நெடுமாறன் அவர்களையும் கைது செய்துள்ளது.

இதைச் செய்தது வேறு யாராக இருந்தாலும் மன்னிக்கப்படலாம். ஆனால் தமிழினத்தின் கருவான தமிழ் நாட்டின் அரசால் புரட்சித்தலைவர் மக்கள் திலகம் எம்.ஜி.ஆர் இன் கொள்கைவழி வந்த கட்சித் தலைவியால் தமிழர் விடுதலைவிரும்பி எம்.ஜி.ஆர் இன் கொள்கைக்கும் முழுத் தமிழினத்தின் அபிலாசைகளுக்கும் தீயிடப்பட்டது என்றுமே உலகத் தமிழினத்தின் வரலாற்றில் மன்னிக்க முடியாத குற்றமாகும்.

இவ்வாறான தமிழக அரசின் அர்த்தமற்றசெயல்களை தீவக மக்கள் சார்பில் தீவக மக்கள் நலன்காப்பகம் வன்மையாக கண்டிப்பதோடு ஈழத்தமிழினத்துக்காக குரல்கொடுத்த வை.கோபாலசாமியையும் அவரது அணியினரையும் பழ.நெடுமாறனையும் உடன் விடுதலைசெய்யுமாறுகோருவதோடு இனிமேலும்ஒருபுனிதமான புரட்சித்தலைவன் வழிசெல்லும் தமிழக அரசு அத்தலைவன் பெயருக்கும் தமிழ்இனத்திற்கும் களங்கம் விளைவிக்காது இருக்குமாறு வேண்டுகின்றோம் என்றுள்ளது.

(ஷ)

## வற்வரி செலுத்தாத இயக்கம் ஆரம்பிக்கப்படும்

(கொழும்பு)

ஐக்கிய தேசிய முன்னணி அரசு அறிமுகம் செய்துள்ள வற்வரி காரணமாக பொது மக்களுக்குபெரும் வாழ்க்கைச் சுமை ஏற்பட்டுள்ளது.

ஆகையால் இவ்வரியை செலுத்த வேண்டாம் எனவும் வற்வரி செலுத்தாத இயக்கத்தை எதிரணி அரசியல் கட்சிகள் விரைவில் ஆரம்பிக்கவுள்ளன என பொதுஜன ஐக்கிய முன்னணியின் பேச்சாளர் கலாநிதி சரத் அமுனுகம தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக மக்களுக்கு எதிரணிக் கட்சிகள் எடுத்துக் கூறவுள்ளதுடன் அது தொடர்பான வேலைத் திட்டங்களை முன்னெடுத்துச் செல்லவுள்ளன. (உ-3)

## நடைபாதை வியாபாரம் சனி முதல் இடம்மாறும்

(யாழ்ப்பாணம்)

யாழ். நகரச் சந்தையில் விற்பனையில் ஈடுபட்டுள்ள நடைபாதை வியாபாரிகள் அவர்களுக்கென ஒதுக்கப்பட்டுள்ள முனீஸ்வரன் வீதியில் றீகல் தியேட்டருக்கு அருகில் எதிர் வரும் 10 ஆம் திகதி சனிக்கிழமை முதல் வியாபார நடவடிக்கைகளை ஆரம்பிக்கவுள்ளனர்.

இதற்கான நடவடிக்கைகளை யாழ். மாநகர முதல்வர் எஸ். கந்தையன் எடுத்து வருகிறார். (உ-2-6)

## கிழக்கு இராணுவ முகாம் பாதுகாப்பு அமைச்சரிடம் ஜனாதிபதி விளக்கம்

(கொழும்பு)

கிழக்கு மாகாணத்தில் மூடப்படவிருக்கும் படை முகாம்கள், அங்கு கடமை ஆற்றுகின்ற இராணுவ வீரர்கள் தொடர்பான விபரங்களை அறிக்கை வடிவில் இணைத்து சமர்ப்பிக்குமாறு பாதுகாப்பு அமைச்சர் திலக் மாரப்பனவிடம் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா கேட்டுள்ளார்.

பாதுகாப்பு அமைச்சரிடம் இருந்து இன்று அறிக்கை பெறப்பட்டவுடன் உடனடியாகப் பாதுகாப்புச் சபையைக் கூட்டவுள்ளதாகவும் ஜனாதிபதி சந்திரிகா அவசர கடிதமூலம் பாதுகாப்பு அமைச்சருக்கு அறிவித்துள்ளார்.

இதேவேளை, தமிழீழ விடுதலைப் புலிகள் கடல் மார்க்கமாக ஆயுதம் கடத்தி வருவதாகவும், படைக்கு ஆட்களைத் திரட்டுவது தொடர்பாகவும் பாதுகாப்பு அமைச்சிடம் விளக்கம் கேட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (ம)

### வசதிகள் மிகக் குறைந்த நிலையில்

## கரைச்சி வடக்கு பிரதேச செயலகம்

(கல்வயல்)

கரைச்சி வடக்கு பிரதேச செயலகம் தொடர்ந்தும் இடம்பெயர்ந்த நிலையில் வசதிகள் ஏதுமற்ற நிலையில் கண்டாவளை வெளிக் கண்டல் பகுதி தனியார் வீடொன்றில் இயங்கி வருகின்றது.

பணியாற்றுவதற்கு போதிய இடவசதியோ தளபாட வசதிகளோ இன்றி பணியாளர்கள் மிகவும் சிரமம் அடைவதுடன் பொது மக்களுக்கான பணிகளை உரிய நேரத்தில் மேற் கொள்வதிலும் சிக்கல் எதிர் கொள்ளப்படுகிறது.

இது இவ்விதமிருக்க மேற்படி பிரதேச செயலகத்தின் சொந்தக் கட்டடம் போர் அனர்த்தத்தினால் முற்றாக இடிந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (உ-111)

## பாராளுமன்றம் இம்மாதம் பதினாறு தடவைகள் கூடும்

(கொழும்பு)

இம்மாதம்16 பாராளுமன்ற அமர்வுகள் யாவும் இடம்பெற 19 ஆம் திகதி தொடக்கம் 22 ஆம் திகதிவரை உள்துறை அமைச்சர் ஜோன் அமரதுங்

### பலாலி வீதியைப் பாவிக்க அனுமதி மறுத்தால்

# ஸ்ரான்லி வீதி, ஆஸ்பத்திரி வீதிகளில் அமைதியான மறியல் போராட்டம்

## பலாலி கட்டளை அதிகாரிக்கு கடிதம்

(யாழ்ப்பாணம்)

ஆரியகுளம் சந்திக்கும் ஆஸ்பத்திரிவீதிச் சந்திக்கும் இடையிலான பலாலி வீதிப் பகுதியைப் பொதுமக்களின் பாவனைக்குத் திறந்து விடவேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தி பலாலி பாதுகாப்புப் படை தலைமை அலுவலககட்டளை அதிகாரி மேஜர் ஜெனரல் சரத்பொன் சேகாவுக்கு வலி- தென்கிழக்கு பொது அமைப்புக்களின் ஒன்றியம்கடிதம் ஒன்றினை அனுப்பி வைத்துள்ளது.

அக்கடிதத்தின் விபரம் வருமாறு,

தமிழீழ விடுதலைப்புலிகளுக்கும் இலங்கை அரசாங்கத்திற்கும் இடையிலான போர் நிறுத்த ஒப்பந்தத்தின் சரத்து 2:5 இற்கு தங்கள் கவனத்தை ஈர்க்க விரும்புகின்றோம். 2002.08 01 ஆம் திகதி நடைபெற்றகூட்டத்தில்ஆரியகுளம் சந்திக்கும் ஆஸ்பத்திரி வீதிச் சந்திக்கும் இடையிலானசிறிய பலாலி வீதிப்பகுதியை பொது மக்கள் பாவனைக்கு திறந்து விடுமாறு தங்களை கோருவதென தீர்மானிக்கப்பட்டுள்ளது.

பொது மக்கள் பாவனைக்குட்படாது இவ்வீதி மூடப்பட்டு இருப்பதன் விளைவாக பின்வரும் அசௌகரியங்கள் பொதுமக்களுக்கு ஏற்படுகின்றன என்பதை குறிப்பிட விரும்புகின்றோம்.

- பலாலி வீதியூடாகவும் பருத்தித்துறை வீதியூடாகவும் நகரத்திற்கு வருகை தரும் மக்கள் ஸ்ரான்லிவீதியூடாகசுற்றி செல்லும்பாதையை பின்பற்ற வேண்டி இருக்கிறது.
- இதன் விளைவாக வேம்படி மகளிர் கல்லூரி, மத்திய கல்லூரி புதுமை மாதா மகா வித்தியாலயம், திருக்குடும்ப கன்னியர் மடம், பொலிஸ் நிலையம் ஆகியவற்றுக்குசெல்பவர்கள்அநாவசியமாகநீண்ட தூரம் பிரயாணம் செய்ய வேண்டி உள்ளது.
- அதேபோன்று இலங்கை வங்கிக்கும், வைத்தியசாலைக்கும் செல்கின்ற மக்கள் நீண்ட தூரம் பயணிக்கவேண்டியுள்ளது.
- இவ்வீதியூடாகவந்தபருத்தித்துறை வீதி மற்றும்பலாலி வீதி வழியாக வந்து ஆஸ்பத்திரி வீதிச்சந்தியில் பஸ் நிலையத்தைநோக்கித்திரும்பியபஸ் வண்டிகளும்இத்தடையினால் வேறுவழித் தடங்களைப் பாவிக்க நிர்ப்பந்திக்கப்பட்டுள்ளன.
- இவ்விதம் பாதைகள் மாறிச்செல்வதனால் நகரத்தின் மத்தியில்குறிப்பாகநவீன சந்தையைச் சுற்றியும்,கஸ்தூரியார் வீதி,மின்சார நிலைய வீதி,ஆஸ்பத்திரிவீதி, காங்கேசன்துறை வீதி போன்றவற்றில் வாகன நெருக்கடியும்,மக்களின் இலகுவானநடமாட்ட தடையும் ஏற்பட்டுள்ளதைஅவதானிக்கமுடிகிறது.

வேம்படி மகளிர் கல்லூரி மாணவர்கள் ஏற்கனவே இப்பாதையினை பயன்படுத்துவதற்கு அனுமதிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

எனவே,இவ் வீதியினை கூடிய விரைவில் திறந்து பொதுமக்கள் பாவனைக்கு அனுமதிக்குமாறு வேண்டுவதுடன் தங்கள் சாதகமான முடிவு கிடைக்குமென நம்புகிறோம்.

இவ்வேண்டுகோளுக்கு சாதகமான பதிலைத் தருவதற்கு ஏதுவாக போதிய நேரஅவகாசம் கொடுத்து அமைதியான மறியல் போராட்டம் ஒன்றை ஸ்ரான்லி வீதி,ஆஸ்பத்திரி வீதிகளில் நடத்துவதற்கான திட்டத்தை 2002 ஒகஸ்ட் 09ந் திகதி வெள்ளிக்கிழமை வரை பிற்போடுவதற்கு தீர்மானித்துள்ளோம் என்றுள்ளது. (உ)

## உப - தபாற் கந்தோர் தீக்கிரை

(யாழ்ப்பாணம்)

குட்டியப்புலம் உப- தபாற் கந்தோர் சில தினங்களுக்கு முன் இரவு வேளையில் இனம் தெரியாத விஷமிகள் சிலரால் தீக்கிரையாக்கப்பட்டது.

இப்பகுதி மக்களின் தொடர்பு சேவையைப்பூர்த்தி செய்த இத் தபாற் கந்தோர் தீக்கிரையாக்கப்பட்டமை குறித்து அப் பகுதி மக்கள் அதிருப்தி வெளியிட்டுள்ளனர். (க-2)

## அவுஸ்திரேலியா பயணம்

(யாழ்ப்பாணம்)

திருமறைக் கலாமன்றஇயக்குநர் பேராசிரியர் நீ.மரியசேவியர் அடிகள்நேற்றுஅவுஸ்திரேலியாவுக்குப் பயணமானார்.

அவர் அங்கு தங்கியிருக்கும் காலத்தில் மன்றச்செயற்பாடுகள் தொடர்பாக ஆராயவுள்ளதுடன் அந்நாட்டுகலைஞர்களையும் சந்தித்து கலந்துரையாடல்களை நிகழ்த்துவார்.

மேலும்,பல கலை நிகழ்வுகளிலும் அடிகளார் கலந்து கொள்வார். (ஷ)

### எரிபொருள் விற்பனை

## நிலையம் இயங்குகிறது

(கல்வயல்)

கடந்த கால போர் நட

## தெல்லிப்பழை தாய்-சேய் சிகிச்சை நிலைய சேவைகள் சீராக நடைபெறுகின்றன

(சுதுமலை)

தெல்லிப்பழை சுகாதார வைத்திய அதிகாரி பிரிவிலுள்ள தாய்சேய் சிகிச்சை நிலையங்களில் தற்போது மருத்துவ சேவைகள் ஒழுங்காக நடைபெற்று வருகின்றன.

கடந்தசில வருடங்களாக இப்பகுதிக்கு சுகாதார வைத்தியஅதிகாரி நியமிக்கப் தாய்மாரையும், குழந்தைகளையும் பார்வையிட்டு வந்தனர். இதனால் கிராமிய வைத்தியசாலை வெளி நோயாளர் பிரிவு ஸ்தம்பிதம் அடைந்தது.

தற்போது வைத்திய கலாநிதி செல்வி நவமலர் கனகரட்ணம் சுகாதார வைத்திய அதிகாரியாக நியமிக்கப்

இம்மாதம் 16 பாராளுமன்ற அமர்வுகள் யாவும் இடம்பெறவுள்ளதாக பாராளுமன்ற வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

பாராளுமன்றத்தில் திருத்தச் சட்ட மூலங்கள் மற்றும் 30 க்கும் மேற்பட்ட சட்ட மூலங்கள் அவசரமாக நிறைவேற்றப்பட வேண்டி இருப்பதனாலேயே இம்மாதம் 16 தினங்கள் சபை கூடவுள்ளது.

இதேவேளை, இம்மாதம் ... 22 ஆம் திகதிவரை உள்துறை அமைச்சர் ஜோன் அமரதுங்காவுக்கு எதிராக சமர்ப்பிக்கப்பட்டுள்ள குற்றப் பிரேரணை மீதான விவாதமும் நடைபெறவுள்ளது.

ஏற்கனவே கட்சித் தலைவர்களின் கூட்டத்தில் எடுக்கப்பட்ட தீர்மானத்துக்கு அமைவாகவே இவ்வாறு கூடவுள்ளதும் குறிப்பிடத்தக்கது.

(ஷ-8)

(கல்வயல்)

கடந்தகால போர் நடவடிக்கைகளால் சேதமாக்கப்பட்ட சாவகச்சேரி பல நோக்குக் கூட்டுறவுச் சங்க எரிபொருள் விற்பனை நிலையம் கடந்த வாரம் முதல் மீண்டும் அதே இடத்தில் இயங்கத்) தொடங்கியுள்ளது.

இதேவேளை, சாவகச்சேரி ப.நோ.கூ. சங்கத்தின் மட்டுவில் வடக்குக் கிளையும் பழைய இடத்தில் செயற்படத் தொடங்கியுள்ளது.

(ஷ-111)

... இப்பகுதிக்கு சுகாதார வைத்தியஅதிகாரி நியமிக்கப்படாமையினால் கிராமிய மற்றும் மத்திய மருந்தகங்களில் கடமையாற்றும் வைத்திய அதிகாரிகளே கர்ப்பிணித் ... கலாநிதி செல்வி நவமலர் கனகரட்ணம் சுகாதார வைத்திய அதிகாரியாக நியமிக்கப்பட்டமையை அடுத்து தாய்சேய் சிகிச்சை நிலையம் சீராக இயங்குகின்றது.

(ஷ-252)

# கஷ்டப் பிரதேசங்களில் 2வருடங்கள் கடமை புரிந்த ஊழியர்க்கு இடமாற்றம்

(கொழும்பு)

வடக்கு-கிழக்கு மாகாணத்தின் கஷ்டப் பிரதேசங்களில் கடமையாற்றும் அரசாங்க அலுவலகங்ளில் 2வருடங்கள் சேவையாற்றியவர்களுக்கு வசதியான அலுவலகங்களில் இடமாற்றம் வழங்கப்படவுள்ளதாகமாகாண பொது நிருவாக உள்ளூராட்சி அமைச்சு அறிவித்துள்ளது,

2003ஆம் ஆண்டிற்கான வருடாந்த இட மாற்றத்தின் கீழ் இவ் இடமாற்றங்கள் மேற்கொள்ளப்படவுள்ளதாக அமைச்சின் செயலாளர் அறிவித்துள்ளார்.

5வருடங்களுக்கு மேல் ஒரே திணைக்களத்தில் கடமையாற்றியோர் ஒரே பிரதேசத்தில் அமைந்திருக்கும் அதே திணைக்களத்திற்குட்பட்ட வேறுறொரு பிரிவிற்கு இடமாற்றம் செய்யப்பட மாட்டார்கள் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கானவிண்ணப்பங்கள் செப்ரெம்பர் மாதம் 15ஆம் திகதிக்கு முன் மாகாண பொது நிருவாக அமைச்சிற்கு அனுப்பி வைக்க வேண்டும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

(உ.3)

## சிறுவன் விபத்தில் காயம்

(மந்திகை)

வழிபடுவதற்காக கோயிலுக்குச் சென்ற சிறுவன் வீதியைக் கடக்க முற்பட்ட வேளை வேகமாக வந்த மோட்டார் சைக்கிளுடன் மோதுண்டதில் படுகாயமடைந்து பருத்தித்துறை அரசினர் வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

கடந்த வெள்ளிக்கிழமை மூத்த விநாயகர் ஆலய வீதியில் இடம்பெற்ற இச் சம்பவத்தில் கரணவாய் தெற்கைச் சேர்ந்த எஸ்.அரவிந்தன் (வயது-5) என்ற சிறுவனே படுகாயமடைந்தவராவர்.

(5.23)

# கைக்குண்டுடன் கைதான இளைஞன் வெள்ளியன்று விடுதலை

(கொழும்பு)

கைக்குண்டொன்றை தன் வசம் வைத்திருந்தார் என்ற குற்றச்சாட்டின் பேரில் கைதான முருகானந்தன் என்ற இளைஞர் குற்றச்சாட்டு வாபஸ் பெறப்பட்டதையடுத்து 4 ஆண்டுகளின் பின் விடுதலை செய்யப்பட்டுள்ளார்.

1998 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 20 ஆம் திகதி யாழ்ப்பாணம் ஆவரங்காலில்வைத்து கைதுசெய்யப்பட்ட இவர் கடந்த நான்கு வருடங்களாக தடுத்து வைக்கப்பட்டிருந்தார்.

கொழும்பு மேல்நீதிமன்றநீதிபதி தீபாலி விஜயசுந்தர முன்னிலையில் கடந்த வெள்ளிக்கிழமை இவ்வழக்கு விசாரணைக்காக எடுத்துக்கொள்ளப்பட்டபோது அரச சட்டவாதி மாதவ தென்னக்கோன் வழக்கை வாபஸ் பெறுவதாக நீதிமன்றத்தில்தெரிவித்தார். இதனையடுத்து நீதிபதி எதிரியை விடுதலைசெய்து தீர்ப்பளித்தார்.

கடந்த 2000 ஆண்டு ஜனவரிமாதம் 5ஆம் திகதி தமிழ்க் காங்கிரஸ் தலைவரும் பிரபல சட்டத்தரணியுமான குமார் பொன்னம்பலம் படுகொலை செய்யப்பட்டதை தொடர்ந்து களுத்துறை சிறைச்சாலையில் இடம்பெற்ற மோதல் சம்பவத்தின் போது படுகாயமடைந்தவர்களில் விடுதலை செய்யப்பட்ட முருகானந்தனும் ஒருவராவார்.

இவர் களுத்துறை சிறைச்சாலையில்இருந்து கடந்தபல மாதங்களாக நீர்கொழும்பு சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (உ

# தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சைக்கான முன்னோடி வினாத்தாள்

ஆக்கம் – ''சாயிகல்வி வட்டம்''
கே.வி.குணசேகரம்
எம்.விக்னேஸ்வரன்

**பின்வரும் விடுகதைப் பாடல்களை விடுவித்து, கீழே கேட்கப்பட்டுள்ள கேள்விகளுக்கு விடை தருக.**

வட்டமான முகமுடையார்
வண்ணமான எழுத்துடையார்
நித்தம் அவர் முகம் பார்த்தே நாம்
தொழில்கள் அனைத்தும் செய்திடுவோம்.

01. இவர் யார்?
02. இவரின் முகத்தில் எழுத்துகள் உண்டு?
03. நித்தம் என்பதன் ஒத்த சொல்?

ஓடியாடிச் செல்லுமாம்
ஒற்றைக் காலில் நிற்குமாம்
பாடிக் கொண்டு சென்றால்
பழைய எண்ணெய் விடுவோமாம்

04. யார் இவர் சொல்லு தம்பி?
05. பாடலிலுள்ள இணைமொழி ஒன்று தருக?
06. ஏன் பாடிக் கொண்டு செல்வார்?

மலையின் உச்சியில் உருவாகி
மள மள வெனவே கீழிறங்கி
சமவெளி எங்கும் விரைந்தோடி
ஆழிக் கரையை அடைவேனாம்.

07. நான் யார் தம்பி?
08. பாடலில் வரும் இரட்டைக்கிளவி ஒன்று?
09. விரைந்தோடி பிரித்தெழுதுக?
10. ஆழிக்ரை என்பதன் ஒத்தசொல்?
11. உச்சி என்பதன் எதிர்ச்சொல்?

அட்டையைப் போல பல பெட்டி
அடுக்கடுக்காத் தான் கொழுவி
விரும்பும் இடங்கள் சென்றடைய
விருப்பத்தோடு ஏறிடலாம்.

12. நான் யார் தெரியுமா?
13. இலங்கையில் நான் தரிக்கும் சந்திகள் இரண்டைச் சொல்லுங்கள் பார்ப்போம்.
14. நான் செல்லும் பாதையை எப்படி அழைப்பார்கள்?

ஆழமான சமுத்திரத்தில்
அழகாய் கப்பல் தனையோட்டி
உலகிலுள்ள பொருள் அனைத்தும்
எமக்குக் கொண்டு வருவாராம்.

15. இவர் யார் தம்பி! இவர் யார் தம்பி?
16. கப்பல் கூடுமிடம்?
17. கப்பல் தங்கி நிற்கும் போது இடப்படுவது?
18. சமுத்திரம் என்பதன் ஒத்தசொல்?
19. இப்பாடலில் வரும் தன்மைப் பெயர் ஒன்று?

பஞ்சு மெத்தை போலுடலாம்
பஞ்சின் மெதுமை தான் காலாம்
பதுங்கிப் பதுங்கிச் சென்றெங்கும்
பல் வகை விலங்கைப் பிடிப்பாராம்.

20. யார் தம்பி! இவர் யார் தம்பி?
21. இவரின் எதிரி?
22. இவர் பிடிக்கும் இரண்டு விலங்குகள்?
23. ''பதுங்கிப் பதுங்கி'' வசனம் அமைக்குக?

கீரை வியாபாரி ஒருவர் தள்ளு வண்டியில் கீரை கொண்டு செல்கிறார். அவர் உரக்க எப்படிக் கூறிச் செல்வார் என இரண்டு வசனங்களில் எழுதுக.
24. ..............................
25. ..............................


''நீர் வைத்தியர்'' என நினைத்துக் கொண்டு உம்மிடம் வரும் நோயாளியிடம் வினாவுவதையும் அவர் பதில் சொல்வதையும் எழுதுக?
26. வைத்தியர் ..............................
27. நோயாளி ..............................
28. வைத்தியர் ..............................

**விடுகதைகளை விடுவிக்குக.**
29. வெயிலில் போகும் போது நண்பன் வீட்டிற்கு வந்தால் விரோதி அவன் யார்........
30. மேலே பறப்பவனுக்கு கீழே கடிவாளம் அது என்ன..............
31. மீன் பிடிக்க மாட்டான் ஆனால் வலைபின்னனுவான் அவன் யார்..............
32. நீந்தத் தெரியும் மீனல்ல நடக்கத் தெரியும். மனிதனல்ல இறகுண்டு பறக்காது அது எது..............


**கீழே தரப்பட்டுள்ள கதையை நிறைவு செய்க.**

சிங்கம் ஒன்று நோயால் எழுந்து நடக்க முடியாமல் படுத்திருந்தது. இரண்டு நாட்களாக அதற்கு உணவு ஏதும் கிடைக்கவில்லை. அப்போது அவ்விடத்துக்கு ஒரு மான் வந்தது.
33. .................... 34. ....................
35. .................... 36. ....................
37. ....................


**தரப்பட்டுள்ள படத்தைப் பார்த்து கதையை எழுதுக?**



38. .................... 39. ....................
40. .................... 41. ....................
42. .................... 43. ....................




44. .................... 45. ....................
46. .................... 47. ....................
48. .................... 49. ....................



50. ....................
51. ....................
52. ....................
53. ....................
54. ....................
55. ....................

**கீழே தரப்பட்டுள்ள படங்களிலுள்ள ஆங்கிலச் சொற்களைத் தமிழில் தருக.**




56. .................... 57. ....................
58. .................... 59. ....................
60. .................... 61. ....................

**பின்வரும் பாடல் வரிகளை முடிக்குக.**

நல்ல நல்ல மல்லிகை 62 ....................
நான் விரும்பும் மல்லிகை. 63. ....................


அணிலே அணிலே வா வா வா 64. ....................
அழகு அணிலே வா வா வா 65. ....................

**பின்வரும் அரும் பதங்களை பிரயோக வழக்கில் எழுதுக.**
66. திருமுகம் .................... 67. பணிமனை ....................
68. அங்காடி .................... 69. அகவை ....................
70. மாத்திரை ....................

''சமாதான பாத யாத்திரையில் கலந்து கொண்ட நாங்கள்'' தொடர்ந்து 6 வசனங்கள் எழுதுக.
71. .................... 72. ....................
73. .................... 74. ....................
75. .................... 76. ....................


**பூ என்ற சொல்லை வைத்துச் சொற்களாக்கிப் படிகளைப் பூர்த்தி செய்க**


77.
78.
79.
80.
81.
82.




**சொற்சக்கரத்தைப் பூர்த்தி செய்க.**

83- 86வரை








**வீட்டு ஈயின் பாகங்களைக் குறிக்குக.**

87. A....................
88. B....................
89. C....................
90. D....................
91. E....................
92. F....................

பூச்சி இனங்களில் காணப்படும் பொதுவான சிறப்புப் பண்புகள் மூன்று தருக.
93. .................... 94. ....................
95. ....................

பூச்சியின் உடற்பாகம் மூன்றும் எவை?
96. .................... 97. ....................
98. ....................




99. A....................
100. B....................
101. C....................
102. D....................
103. E....................
104. F....................
105. G....................

**சரியான விடையின் கீழ் கீறிடுக.**

106. பூக்களுக்கு தீங்கு விளைவிக்கும் பிராணிகள் எவை?
1. பச்சிலைப்பூச்சி, வண்டு 2. எறும்பு, தேன் 3.சிலந்தி, வண்ணத்துப்பூச்சி
107. பிராணிகளால் பூக்களுக்கு ஏற்படும் நன்மை என்ன?
1. பூவின் வாசம் 2. தேன் ஊறல் 3. கருக்கட்டல்
108. உணவு, பானம் தயாரிக்கப்படும் பூ ஒன்று
1. றோசா 2. செவ்வரத்தை 3. மல்லிகை
109. சமய, பண்பாடு, சமூக விடயங்களுக்காகப் பயன்படும் இலை.
1. இஞ்சியிலை. 2. கரும்பு இலை 3. மாவிலை
110. அஸ்பிறின் 1/4 பங்கை நீரில் இட்டு பாதுகாக்கப்படக் கூடியது.
1. மீன் 2. பூ 3. காய்கள்.

**இப்பந்தியை நன்கு வாசித்து விடை எழுதுக.**

எனது அம்மா கடைக்குச் சென்று ஓர் ஓடிக்கலோன் போத்திலையும் அத்துடன் பல்வேறு பொருட்களையும் வாங்கினார். அவை என்னவென்று கூறுகின்றேன் கேளுங்கள். ''செவின் அப்'' ஒன்று, வனிலா எசென்ஸ் ஒன்று, பேக்கிங் பவுடர் ரின், அப்பச்சோடா, சலவைச் சோடா, ஓடிக்கலோன் என்பன அவற்றுள் சிலவாகும்.

111. எனது விரலால் சிறிதளவை எடுத்து கையில் இட்டு நீர்த்துளிகள் சிலவற்றை சேர்த்ததும் குளிர்ந்தது. அது எதுவாக இருக்கும்? ....................
112. எனது அண்ணா தனது கையிலிட்டு நீர்த்துளிகள் சேர்த்து விட்டு கூறினார். தனது கை சுடுவதாக அது என்ன பொருள் எனக் கூறுங்கள்?
113. எனது தங்கை சிறிய மூடியில் ஓர் திரவத்தை ஊற்றி வைத்தாள். அதை சிறிது வேளையில் காணவில்லை. என சத்தமிட்டாள். அது எத்திரவம்?
114. வனிலா போத்தலில் காணப்பட்ட வனிலாவின் கொள்ளளவு யாது?
115. 1500ml அல்லது $1^1/_2$l என எதில் எழுதப்பட்டிருந்தது?

# இன்று ஒரு தகவல்

## பலாப் பழத்தின் பலன்

கொஞ்ச நாட்களுக்கு முன் பேப்பரில் ஒரு செய்தி பார்த்தேன். கேரளத்து ஒற்றைப் பாலத்துக்குப் பக்கத்தில் ஒருயானை வந்து கொண்டிருந்ததாம். அதற்கு வயது 25 பார்ப்பதற்கு வாட்டசாட்டமாக இருந்திருக்கிறது. யானைப் பாகனும கூடவே வந்து கொண்டிருக்கிறார். வழியில் ஒரு இடத்தில் பலாப் பழம் குவிந்து கிடந்ததாம். மழைக் காலம் ஆரம்பம் அதனால் அந்தச் சமயத்தில்அதன் விலை மிகவும்மலிவு. யானைப் பாகன் இது தான் சமயமென்று நினைத்து குறைந்த விலைக்கு பலாப்பழத்தை வாங்கி யானைக்குக் கொடுத்திருக்கிறார். யானையும் சளைக்காமல் தன் பாட்டுக்கு சாப்பிட்டுக் கொண்டிருந்திருக்கிறது. 12 பழத்தை முழுமையாக விழுங்கிவிட்டது. அதுவரை ஒன்றும் பிரச்சினை இல்லை.

ஒரு நாலுமணிநேரம்போன பின்னர் தான் பிரச்சினை ஆரம்பம். வயிற்றுவலி ஆரம்பமாகிவிட்டது. ஒரே கத்தல். யானை கத்தினால் எப்படி இருக்கும்? கத்திக் கொண்டே வலி தாங்காமல் அங்கும் இங்கும்? ஓட ஆரம்பித்து விட்டது. பாகனுக்கு ஒன்றும் புரியவில்லை. கடைசியில் கால் நடைவைத்திய நிபுணர்கள் வந்து அந்த யானைக்கு மயக்க ஊசிபோட்டு அதன் பின்பு ஜீரணமாவதற்கு வேண்டிய சிகிச்சைகள் எல்லாம் செய்து ஒரு வழியாக சரிப்படுத்தியிருக்கிறார்கள். ஆறுமணி நேரத்திற்குப் பின்னர் 'அப்பாடா' என்று அந்த யானை மெதுவாகக் கண்ணைத் திறந்து பார்த்திருக்கிறது.

பலாப்பழத்தில் சில சத்துக்கள் இருக்கின்றன. உண்மை தான். இருந்தாலும் அளவுக்கு மீறி அதைச் சாப்பிட்டால் அஜீரணம் உண்டாகிவிடும். யானைக்கு மட்டுமில்லை. நமக்கும் தான். ஏற்கனவே ஜீரணக் கோளாறு உள்ளவர்கள் பலாப்பழத்தை பார்த்து விட்டு ஆசைப்படாமலிருப்பது நல்லது. நல்லஜீரண சக்தியோடு இருக்கிறவர்கள் கூட அதைச் சாப்பிடும்போது ஒரு அளவோடு நிறுத்திக்கொள்வது தான் நல்லது. பலாப் பிஞ்சு பித்தத்தை போக்குமாம். ஆண்மை சக்தியை பெருக்குமாம். பலாவேரை இடித்துநீரில் காய்ச்சி, வடித்து எடுத்துக் கொள்ள வேண்டியது. இது ஒரு மருந்து. இதில் சில சொட்டுக்களை மூக்கில் விட்டால் சளி, தலைவலி எல்லாம் ஓடிப்போய்விடுமாம். பலாக் கொழுந்து இருக்கிறதல்லவா? அதை எடுத்து அரைத்து சிரங்குகளின்மேல் தடவினால் நல்ல குணம் கிடைக்குமாம். பலாமரத்துப் பாலை வீக்கங்களின் மேல் தடவினால் அவை சரியாகி விடுமாம், இப்படியெல்லாம் மருத்துவ குணங்கள் இருந்தால்கூட பலாப்பழத்தில் பொதுவாக ஊட்டச்சத்து குறைவாகத்தான்இருக்கிறது. முக்கியமாக இதில் கரோட்டின், விற்றமின் 'சி' என்பன இருக்கின்றன. கல்சியம்-பொஸ்பரஸ்-இரும்புச் சத்து பொட்டாசியம்என்பனகூட இருக்கின்றன. இருந்தாலும் என்ன செய்வது? அதிகமாகச் சாப்பிட்டால் அந்த யானை மாதிரி அவஸ்தைப்பட வேண்டியிருக்கிறதே!

அவை யெல்லாம் இருக்கட்டும். ஒரு பலாப்பழத்தை வெட்டிப் பார்ப்பதற்கு முன்னர் உள்ளே எத்தனை சுளைகள் இருக்கிறதென்று கண்டுபிடிக்க முடியுமா? அது எப்படி முடியும் என்று யோசிக்கிறீர்களா? முடியும் என்று சொல்கிறது கணக்கதிகாரம் என்கிற சோழர் காலத்து நூல் ஒன்று அது என்ன சொல்கிறது தெரியுமா? 'பலாவின் சுளையறிய வேண்டுதிரேல் ஆங்கு சிறுமுள்ளுக்காம்பருகெண்ணி வருவதை ஆறிற் பெருக்கி ஐந்தினுக் கீந்திடவே வேறெண்ண வேண்டாஞ் சுளை' என்கிறது.

அதாவது, ஒருபலாப்பழத்தைப் பார்த்தவுடனே அதனுடைய காம்புக்குப் பக்கமாக உள்ள சின்னமுள்ளுஎத்தனையென்று எண்ண வேண்டுமாம். அதை ஆறால் பெருக்கி ஐந்தால் வகுக்க வேண்டுமாம். என்ன விடை வருகிறதோஅத்தனை சுளை தான் அந்தப் பழத்துக்குள்ளே இருக்குமாம். முடிந்தவர்கள் சோதனை பண்ணிப் பாருங்கள்.

ஒருகதை தெரியுமா உங்களுக்கு?' ஓர்ஊரில்ஒரு இராஜா இருந்தார். அவருக்குப் பிறந்த நாள் வந்தது. அரண்மனையில் அவர் உட்கார்ந்து இருக்கிறார். அரண்மனைக்கு வெளியே ஒரு நீண்டவரிசை. முக்கியமானவர்கள் எல்லோரும் அரசரைக் கண்டு கொண்டு போவதற்காக காத்துக் கொண்டிருக்கிறார்கள். அவரவரால் எது முடியுமோ அதைப் பரிசாகக் கொடுத்து விட்டு அவரை வணங்கி விட்டுப் போவது வழக்கம். ஆனால் அந்த ராஜா ஒரு 'மூடிரைப்' சிலநேரம் சந்தோஷமாக இருப்பார். சிலநேரம் விபரீதமாக நடந்து கொள்வார். ஒருமாதிரியான ராஜா.

அன்றைக்குப்பார்த்து அவருக்கு மனோநிலை சரியில்லை வரிசையில்நின்ற ஒருவர் முதலில் உள்ளே போனார். அவர் கையிலிருந்த ஒரு எலுமிச்சம் பழத்தை ராஜாவின்கையிலே கொடுத்தார். ராஜாவினுடைய மனோநிலைதான் சரியில்லையே, அதனால் அவர் அந்தப்பழத்தை வாங்கினார். உடனே அதைக் கொடுத்தவர் வாயைத் திறக்கச் சொன்னார். அவரின் வாயிலேயே அந்தப்பழத்தைத் திணித்து அடைத்து ஒருநாள் பூராவும் அப்படியே இருக்கவேண்டும் எனஉத்தரவுபோட்டார். எலுமிச்சம்பழம் கொடுத்தவர் அதிர்ச்சி அடையவில்லை. அதற்குப் பதிலாகச் சிரிக்க ஆரம்பித்துவிட்டார். ராஜாவுக்குக் கோபம் மேலிட்டது ஏன் சிரிக்கிறாய் என்றார்.

'அதற்கில்லை மன்னா' எலுமிச்சம்பழத்தை என்னுடைய வாய்க்குள் ஒருநாள் முழுவதும் வைத்திருப்பது எனக்கு ஒன்றும் கஷ்டமில்லை. ஆனால் அரண்மனைக்கு வெளியில் நிற்கிற வரிசையில்(கியூ) ஒருவர் ஒரு பெரிய பலாப்பழத்தை வைத்துக்கொண்டு நின்றுகொண்டிருக்கிறாரே! அவருடைய நிலைமை என்னவாகும்? என்று நினைத்துப் பார்த்தேன். அதுதான் சிரிப்பு வந்துவிட்டது' என்றார்.

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

# குற்றச்சாட்டை வாபஸ் பெற சட்டமா அதிபர் திணைக்களம் மறுப்பு

(கொழும்பு)

அன்ரனி தவச்செல்வம் அல்லது அன்ரனி மாஸ்ரர் என்பவர், கொழும்புத்துறைமுக தாக்குதல் குறித்த தகவலை பொலிஸாருக்கு வழங்கத்தவறிய குற்றச்சாட்டின் பேரில் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

பயங்கரவாததடைச்சட்டத்தின் 5 ஆம் பிரிவின் கீழ்தாக்கல் செய்யப்பட்ட குற்றச்சாட்டை வாபஸ் பெறுவதற்கில்லையென சட்டமா அதிபர் திணைக்களம் தெரிவித்துள்ளது.

கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி தீபாலி விஜயசுந்தர முன்னிலையில் இவ்வழக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட போது இது பாரதூரமானசம்பவம் தொடர்பான குற்றச்சாட்டு என்பதால் அதனை வாபஸ் பெறுவதற்கில்லையென அரசசட்டத்தரணிதெரிவித்துள்ளார்.

இதனைஎதிர்த்து வாதாடிய எதிர்த்தரப்பு சட்டத்தரணி என். ஸ்ரீகாந்தா ஏற்கனவே 5 ஆம் பிரிவின் கீழான தகவல் கொடுக்கத்தவறிய குற்றச்சாட்டுகள் வாபஸ் பெறப்பட்டிருக்கையில், இந்த எதிரிக்கு மாத்திரம் ஏன் இந்த பாரபட்சம் எனநீதிமன்றத்திடம் கேட்ட போது, வாபஸ் கோரிக்கை சட்டமா அதிபர் திணைக்களத்தால் நிராகரிக்கப்பட்டிருப்பதாக அரச சட்டவாதி நீதிமன்றத்தில் தெரிவித்ததையடுத்து வழக்கு விசாரணை ஒக்டோபர் மாதம் 23 ஆம் திகதிக்கு ஒத்தி வைக்கப்பட்டது. (உ)

## இராசி பலன்

7-8-2002
(ஆடி 22, புதன்)
சதுர்த்தசி பி.இ. 2.54 வரை
புனர்பூசம் பி.ப. 5.01 வரை
ராகுகாலம் 12.04- 1.34
நல்லநேரம் 4.34- 6.04
சித்தம்.

**மேடம்**
மனச்சோர்வு, காரியதாமதம், விரும்பாதஉறவு, போசன சுகம்.

**இடபம்**
காரிய நன்மை, பொருள் சேர்க்கை, குடும்பத்தில் மகிழ்ச்சி, வாக்கு மேன்மை.

**மிதுனம்**
வீண்விவாதம், பொருள் விரயம், கௌரவக் குறைவு, தொழில் கஷ்டம்.

**கடகம்**
ஜனவசியம், நல்ல உணவு கிடைத்தல், உஷ்ண நிலை, பொருள் சேர்க்கை.

**சிங்கம்**
குடும்பசுகம், சயன சுகக் குறைவு, கோபப்படுதல், முயற்சி தாமதம்.

**கன்னி**
கீர்த்தி, எதிர்பாராத நன்மை, பொருள் சேர்க்கை, நினைத்த காரியம் கைகூடும்.

**துலாம்**
சுபநிகழ்வு, தொழில் முன்னேற்றம், மேன்மை, முயற்சி கைகூடும்.

**விருச்சிகம்**
உடல் உழைப்பு, வயிற்று வலி, ஆன்றோர் மதிப்பு, திடீர் பயணம்.

**தனுசு**
நண்பர்கள்வெறுப்பு, காரிய தடங்கல், போசன சுகம், தொழில் கஷ்டம்.

**மகரம்**
சுவாரஸ்யம், கலந்துரையாடல், பெரியோர் சந்திப்பு, காரிய நன்மை.

**கும்பம்**
சத்துரு ஜெயம், புதிய தொழில்சிந்தை, மனமகிழ்ச்சி, முயற்சி ஜெயம்.

**மீனம்**
ரோக நிலை, இன சன தொடர்பு, பிரயாண இடையூறு, வியாபார நன்மை.

(பழைய நேரப்படி கணிப்பிடப்பட்டது)

வளவன்

தமிழ்த் தேசிய இனக் கட்டமைப்பின்,

# தூண்களாக விளங்குவது மொழியும் கலையுமே

### சொலமன் சூ. சிறில் உரை

(யாழ்ப்பாணம்)

தமிழ்த் தேசிய இனத்தின் கட்டமைப்பின் தூண்களாகவும், நாகரிகத்தின் அத்திபாரமாகவும் விளங்குவது எமது மொழியும் கலையும் பண்பாடும் தான்.

இவற்றைக் கட்டிக் காப்பதற்கும் வளர்ப்பதற்காகவுமே இந்த மண்ணில் ஒரு தர்ம யுத்தம் நடைபெற்றது.

கொழும்பு திருமறைக் கலாமன்றத்தின் ''மண்தந்த பண்கள்'' நாட்டுக் கூத்துப் பாடல்களின் ஒலிப்பேழை வெளியீட்டு விழா அண்மையில் யாழ். திருமறைக் கலாமன்றத்தில் வேட்மன் ஜெயராஜா தலைமையில் இடம் பெற்ற போது, பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட நாட்டுக் கூத்துக் கலைஞனும் யாழ். மாவட்ட வெகுஜன அமைப்புகளின் ஒன்றியத் தலைவருமான சொலமன் சூ. சிறில் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் தொடர்ந்தும் கூறுகையில்,

எமது மக்கள் பெரும் துன்பங்களையும் துயரங்களையும், அழிவுகளையும், அனர்த்தங்களையும் இடர்பாடுகளையும், இடம்பெயர்வுகளையும் பசியையும் பட்டினியையும் சந்தித்து நின்றார்கள் இதை நாம் மறுப்பதற்கில்லை.

ஆனால் இந்த யுத்தமானது ஒரு தீர்க்க தரிசனமான அரசியல் முடிவென்பதை எல்லா மக்களும் மனப்பூர்வமாக ஏற்றுக் கொண்டு தமது துறை சார்ந்த பங்களிப்பை அளித்ததின் காரணமாகவே இது மக்கள் போராட்டமாக பரிணாமம் கொண்டு உலகின் கவனத்தை ஈர்த்து உலகமே எம்மை விழி திறந்து பார்த்துக் கொண்டிருக்கிறது.

உலகின் மனச்சாட்சி பேசிக் கொண்டிருக்கிறது.

இந்த வகையிலே மண்ணின் கலைஞர்கள், கவிஞர்கள், எழுத்தாளர்கள், படைப்பாளிகள், ஊடகவியலாளர்களின் பங்களிப்பு மிகவும் பாராட்டுக்குரியது என்றார். ஒலிப்பேழையின் மதிப்பீட்டுரையை கலாமன்ற பொதுச் செயலாளர் ஜோண்சன் ராஜ்குமார் நிகழ்த்தினார். (உ)

# உடன் தொடர்பு கொள்க

(யாழ்ப்பாணம்)

கீழே பெயர் குறிப்பிடப்பட்டவர்களை உடன்வந்துசந்திக்குமாறு யாழ். செஞ்சிலுவைச் சர்வதேசக்குழுகேட்டுள்ளது.

இளையதம்பி ராசகிளி, முருகன் கோவில் வீதி, நாகர் கோவில் கிழக்கு,

ராசமணி மனோரஞ்சித மலர், திருமலை இடம்பெயர்ந்தோர் முகாம் நாகர் கோவில் வடக்கு. (உ)

# பாராளுமன்றச் செயலாளர் நாயகமாக பிரியாணி

(கொழும்பு)

இலங்கைப் பாராளுமன்றத்தின் முதலாவது பெண் செயலாளர் நாயகமாக பிரியாணி விஜேசேகர நியமிக்கப்பட்டுள்ளார்.

இதுவரை காலமும்பாராளுமன்றத்தின் செயலாளர் நாயகமாக கடமையாற்றி வந்த தம்மிக்க இத்துல்கொட அரசியலமைப்பு சபையின் செயலாளராக கடந்த வியாழக்கிழமை சபாநாயகர் ஜோசப் மைக்கேல் பெரேரா முன்னிலையில் சத்தியப் பிரமாணம் செய்து கொண்டதையடுத்தே பிரியாணிக்கு இப்பதவி வழங்கப்பட்டுள்ளது (உ-3)

# 22 வது பட்டமளிப்பு விழா; பிற்போடப்பட்டது

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் 22 ஆவது பட்டமளிப்பு விழா எதிர்வரும் அக்டோபர் மாதம் 12 ஆம் திகதிக்குப் பிற்போடப்பட்டுள்ளதாக பல்கலைகழக வட்டாரங்கள் தெரிவித்தன.

அக்டோபர் 6 ஆம் திகதி பட்டமளிப்புவிழாவை நடத்துவதற்கு முன்னர் தீர்மானிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஷ)

# பரு. நகர மைதானத்தில் நவீன வசதிகளுடன் பொதுச் சந்தை அமையும்

(மந்திகை)

பருத்தித்துறை நகர மைதானத்தில் நவீன வசதிகளுடன் கூடிய பொதுச் சந்தை அமைக்கப்படவுள்ளது.

இச் சந்தையினை அமைப்பதற்கு பாராளுமன்ற உறுப்பினர் எம். கே. சிவாஜிலிங்கம் பிரதேச செயலர் ஆ. சிவசுவாமி ஆகியோர் நடவடிக்கை எடுத்துள்ளதாக தெரியவருகின்றது.

மாடிகளுடன் கூடிய இக் கட்டிடத்தை அமைப்பதற்கு சுமார் 5 கோடி செலவாகுமென மதிப்பிடப்பட்டுள்ளது. (உ-23)

# திரைமறைவில் மேற்கொள்ளப்படும் சதி முயற்சிகளை அரசு முறியடிக்கும்

## மலேசிய அமைச்சரிடம் திலக் மாரப்பன

(கொழும்பு)

அரசியல் ரீதியில் திரைமறைவில் மேற்கொள்ளப்படும் சகல சதி நடவடிக்கைகளையும் முறியடிக்கும் ஆற்றல் ஐக்கிய தேசியமுன்னணி அரசாங்கத்துக்கு உண்டென பாதுகாப்பு அமைச்சர்திலக் மாரப்பன தெரிவித்துள்ளார்.

இருநாள் விஜயம் மேற்கொண்டு இலங்கை வந்துள்ள மலேசிய தொழில் அமைச்சர் டேற்றோசெரி சாமிவேலுவை நேற்று முன்தினம் சந்தித்துபேசியபோதே இவ்வாறுதெரிவித்துள்ளார்.

ஏனைய அரசியல் கட்சிகள் திரைமறைவில் சதிமுயற்சிகளை மேற்கொண்ட போதிலும் கூட அரசு மிகவும்பலம் வாய்ந்த நிலையில் உள்ளது.

எந்தவொரு சதிமுயற்சிக்கும் திட்டங்களுக்கும் முகம் கொடுக்க அரசாங்கம் தயாராகவுள்ளது. இது குறித்த விடயங்களை எதிர்கொண்டு சுலபமான முறையில் தீர்த்து வைக்கும் என்ற நம்பிக்கை அரசுக்கு இருப்பதாகவும் தெரிவித்துள்ளார்.

அரசியல் கட்சிகளினாலும் அரசியல் வாதிகளினாலும் மேற் கொள்ளப்பட்டுவரும் சகலநடவடிக்கைகளையும் முறியடிக்க திட்டங்கள் தீட்டி வருகின்றோம்.

அரசியல் யாப்பு ரீதியாக தற்போதைய அரசாங்கத்தை கலைப்பதற்கு பொதுஜன ஐக்கிய முன்னணி மேற்கொண்டுவரும் முயற்சிகள் யாவும் அரசியல் ரீதியானவையேஎன்று குறிப்பிட்டார்.

மலேசியஅமைச்சர் பிரதமர் மற்றும் ஏனைய அமைச்சர்களையும்சந்தித்து பேச்சுவார்த்தைநடத்தவுள்ளார். (உ-8)

# நாவற்குழியில் மீட்கப்பட்ட எலும்புக்கூடு கொழும்புக்கு

(மந்திகை)

நாவற்குழி தச்சன் தோப்புப் பகுதியில் கடந்த ஏப்ரல் மாதம் வீடு ஒன்றில் இருந்து மீட்கப்பட்ட மூன்று பேரினுடைய மனித எலும்புக்கூட்டு தொகுதியினை இரசாயன பகுப்பாய்வுக்காக கொழும்புக்கு அனுப்பி வைக்குமாறு சாவகச்சேரி நீதி மன்றம் உத்தரவிட்டுள்ளது.

பொலிஸாரால் மீட்கப்பட்ட இந்த எலும்புக்கூடுகள் தொடர்பான விசாரணை கடந்த வியாழக்கிழமை நடைபெற்ற போதே இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. (த-23)

# குழந்தையை தத்தெடுக்க நீதிமன்றம் கோருகிறது

(மந்திகை)

பருத்தித்துறை தும்பளையில் அநாதரவான நிலையில் மீட்கப்பட்ட பெண்குழந்தையொன்றை தத்தெடுத்து வளர்க்க விரும்புவோரிடமிருந்து பருத்தித்துறை மாவட்ட நீதிமன்றம் விண்ணப்பம் கோரியுள்ளது.

இப்பெண்குழந்தை கடந்த மாதம் 9ந்திகதி தும்பளை லூர்த்துமாதா தேவாலயத்துக்கு அருகில் உள்ளபற்றையொன்றிலிருந்து மீட்கப்பட்டு பருத்தித்துறை அரசினர் ஆதார வைத்தியசாலையில் பராமரிப்பில் வைக்கப்பட்டுள்ளது.

இக்குழந்தையை தத்தெடுக்கவிரும்புபவர்கள் பருத்தித்துறை மாவட்ட நீதிமன்ற பதிவாளரிடம் அல்லது மாவட்ட வைத்திய அதிகாரியிடம் விண்ணப்பங்களைச் சமர்ப்பிக்குமாறு கோரப்பட்டுள்ளது.

இதேவேளை கடந்தவருடம் இவ்வாறு ஆண்குழந்தையொன்றை தத்தெடுக்க விண்ணப்பம் கோருமாறு நீதிமன்றால் அறிவிக்கப்பட்டிருந்தமையும் இங்குகுறிப்பிடத்தக்கது. (இ-23)

# அரசின் குற்றச்சாட்டுகளை பொருட்படுத்துவதில்லை

## பொ. ஐ. மு. தீர்மானம்

(கொழும்பு)

ஆட்சியைக் கவிழ்ப்பதற்கு சதிசெய்கிறது என்று அரசு சுமத்திவரும் குற்றச்சாட்டுக்களை பெரிது படுத்திக்கொள்வதில்லை என்று பொதுஜன ஐக்கிய முன்னணியில் அங்கம் வகிக்கும் கட்சித் தலைவர்கள் தீர்மானித்துள்ளனர்.

அரசாங்கம் ஊடகங்கள் மூலம் கட்டவிழ்த்துவிட்டுள்ள பொதுஜன ஐக்கிய முன்னணியின் சதி தொடர்பாக, பொதுஜன ஐக்கிய முன்னணியில் இணைந்துள்ள கட்சித் தலைவர்கள் கூடி அண்மையில் ஆராய்ந்தனர். இதில் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா கலந்து கொள்ளவில்லை.

அரசாங்கத்தின் சமாதான முயற்சிகள் குறித்தும் அரசாங்கத்தின் தனியார் மயப்படுத்தல் கொள்கை குறித்தும் இக்கூட்டத்தில் ஆராயப்பட்டது. இம்மாதம் 13 ஆம் திகதிமீண்டும் கூடி ஆராய்ந்து இது தொடர்பாக முடிவு எடுப்பதென்றும் தீர்மானிக்கப்பட்டது.

இதேவேளை தனது அங்கீகாரமில்லாமல் தனது பெயரும் சதிமுயற்சிகளில் சேர்த்துக் கொள்ளப்பட்டுள்ளதாக லக்ஷ்மன் கதிர்காமரும் அரசைக் குற்றம்சாட்டியுள்ளார். (ம)

# சமாதானப் பேச்சுக்கள் குறித்து தெளிவான நிலைப்பாடு இல்லை

## ஐ. தே. மு. அரசைச் சாடுகிறார் தினேஷ்

(கொழும்பு)

இரு தசாப்தங்களாக நடைபெற்றுவந்த யுத்தத்தினை முடிவுக்கு கொண்டுவரும் சமாதானப் பேச்சுக்களை ஆரம்பிப்பது குறித்து அரசுக்கு தெளிவான ஒரு நிலைப்பாடு இல்லையென பாராளுமன்ற உறுப்பினர் தினேஷ் குணவர்த்தன தெரிவித்துள்ளார்.

கொழும்பு மாவட்ட மக்கள் ஐக்கிய முன்னணியின் முக்கிய பிரமுகர்கள் மத்தியில் உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

தொடர்ந்தும் அவர் பேசுகையில், தமதுபடை பலத்தை அதிகரிக்கும் நோக்குடன் தமிழீழ விடுதலைப்புலிகள் பேச்சுவார்த்தைகளை பின்னடித்துச்செல்கிறார்கள்எனவும் குற்றம் சாட்டியுள்ளதுடன்.

வடக்கு-கிழக்கு பிரதேசங்களில் உள்ள படைமுகாம்களை புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் அடிப்படையில் அகற்றிக்கொள்வது தொடர்பாக அரசாங்கம் கூடுதலான கவனம் செலுத்த வேண்டும் எனவும் அங்கு கேட்டுக்கொண்டார். (உ-8)

# அ: அட்டைகளை நீதிமன்றில் பெறலாம்

(யாழ்ப்பாணம்)

பொதுமக்களினால் தவறவிடப்பட்ட ஒரு தொகுதி தேசிய அடையாள அட்டைகள் யாழ். மாவட்ட நீதிமன்றில் உள்ளதாகவும் உரியவர்கள் கடமை நேரத்தில் வந்து பெற்றுக்கொள்ளலாம் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

- பெரியதம்பி கணேசலிங்கம், கோப்பாய் தெற்கு.
- இலங்கை நாதன் சுரேஸ்குமார், ஆதித்தன் வளவு கோப்பாய் தெற்கு.
- மருதன்செல்வராசாபழம் வீதி கந்தர்மடம்.

ஆகியோரின் அடையாள அட்டைகளையே வந்துபெற்றுக் கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (உ-6)

# வயோதிப மாதுவிடம தங்க நகை கொள்ளை

(யாழ்ப்பாணம்)

வீட்டின் முன்பாக நின்ற வயோதிப மாதுவிடம் முகவரி ஒன்றை விசாரிப்பதாக பாசாங்கு செய்த இருவர் அவரின் முகத்தில் 'பவுடர்' ரகம் போன்ற ஒன்றை வீசி மயக்கமுற வைத்தபின் 8 பவுண் பெறுமதியான தங்கச் சங்கிலியையும் காப்புகளையும்கொள்ளையடித்துச் சென்றுள்ளனர்.

இச் சம்பவம் கடந்த புதன் கிழமை இரவு 8 மணியளவில் கலட்டி அம்மன் கோவிலடிப் பகுதியில் இடம் பெற்றுள்ளது.

இவ்விடத்தைச் சேர்ந்த திருமதி முருகேசம்பிள்ளை இராசமணி என்ற மூதாட்டியிடமே கொள்ளையர்கள் இத்துணிகரத் திருட்டை மேற்கொண்டுள்ளனர். (ஷ)

# திறந்த பல்கலை பட்டமளிப்பு

(சுதுமலை)

யாழ். திறந்த பல்கலைக் கழகத்தின் பட்டப்படிப்பின் கல்விடிப்ளோமாபரீட்சையில் சித்தியடைந்தவர்களிற்கு எதிர்வரும் 23 ஆம் திகதி கொழும்பு பண்டாரநாயக்க சர்வதேச மகாநாட்டு மண்டபத்தில் பட்டமளிப்பு விழா இடம்பெறவுள்ளது.

யாழ். மாவட்டத்தில் பட்டப் படிப்பின் கல்வி டிப்ளோமா பரீட்சையில் சித்தியடைந்தவர்களிற்கு கொழும்பில் உள்ள திறந்த பல்கலைக் கழக பதிவாளரினால் அழைப்புக் கடிதங்கள் அனுப்பப்பட்டுள்ளன. (ஷ-252)

# மர்மப்பொருள் வெடித்து இளைஞன் காயம்

(மந்திகை)

குப்பை எரித்தபோது குப்பைக்குள் இருந்த மர்மப் பொருள் வெடித்ததில் இளைஞர் ஒருவர் படுகாயமடைந்த நிலையில் வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

கடந்த ஞாயிறு இடம்பெற்ற இச்சம்பவத்தில் மிருசுவில் வடக்கு மன்னங் குறிச்சியைச் சேர்ந்த மெய்கண்டதேவர் விமலநாதன் (வயது-18) என்ற இளைஞனே படுகாயமடைந்த நிலையில் பருத்தித்துறை அரசினர் ஆதார வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (த-23)

# உடத்தலவின்ன விசாரணைகள் ட்ரயல் அட்பாரில்

(கொழும்பு)

உடத்தலவின்ன படுகொலை சம்பந்தமான வழக்கு ''ட்ரயல் அட்பார்'' நீதிமன்றத்தினால் விசாரிக்கப்படவுள்ளது.

இந்நீதிமன்றத்துக்கு மூன்று மேல் நீதிமன்ற நீதிபதிகளை, பிரதம நீதியரசர் சரத் என் சில்வா நேற்றுமுன்தினம் நியமித்துள்ளார்.

கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதிகளான எரிக்பஸநாயக்க, திபாலி விஜய சுந்தரா, மாத்தளை மேல் நீதிமன்ற நீதிபதி சுனில் ராஜபக்ஷ ஆகியோரே நியமிக்கப்பட்டுள்ளனர்.

சட்டமா அதிபர் கே.சி. கமல சபேசனின் வேண்டுகோளினபடுத்தே ட்ரயல் அட்பார் நீதிமன்றில் இவ் வழக்கு விசாரிக்கப்படவுள்ளது. (உ-8)

# தென்மராட்சி கிழக்கில் மீளக் குடியமர்தல் உடன் சாத்தியமில்லை

## நேரில் சென்று திரும்பியோர் தகவல்

(தென்மராட்சி)

தென்மராட்சி கிழக்குப் பிரதேசத்திலுள்ள எழுதுமட்டுவாழ், சரம்பகம், ஒட்டுவெளி, மிருசுவில்படித்தமகளிர் திட்டம் போன்ற பகுதிகளில் மீளக் குடியமரக்கூடிய சாத்தியப்பாடுகள் மிகவும் குறைவாகவே காணப்படுகின்றன.

அப்பகுதிகளிலுள்ள பாடசாலைகள் வணக்கஸ்தலங்களில் இருந்து படையினர் வெளியேறியுள்ளமையை அவதானிக்கக்கூடியதாகவுள்ளது எனவும், பெரும் எண்ணிக்கையான மக்களின் வாழ்விடங்கள் அழிக்கப்பட்ட நிலையில் இருப்பதாகவும் அண்மையில் அங்கு இராணுவத்தினரால் அழைத்துச்செல்லப்பட்டவர்கள் தெரிவித்தனர்.

கடந்த மாதம் சாவகச்சேரிக்கு விஜயம்செய்திருந்த பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஒஸ்ரின் பெர்னாண்டோவின் உத்தரவுக்கமைய சாவகச்சேரியைச் சேர்ந்த வணிகர் மன்றச்செயலாளர் டாக்டர் எஸ். எஸ். அருளானந்தம், தென்மராட்சி மக்கள் நலச்சேவைகள் சங்கத் தலைவர் பேராசிரியர் க.கந்தசாமி, சாவகச்சேரி இந்துக் கல்லூரி அதிபர் வி. கைலநாதன், கிராமசேவையாளர் எஸ். நவரத்தினராஜா ஆகியோரை 55 வது படையணியின் அதிகாரி ராஜபத்திரன அழைத்துச்சென்று மேற்படி பகுதிகளைக்காண்பித்தார்.

எழுதுமட்டுவாழ், கரம்பகம், ஒட்டுவெளி, மற்றும் மிருசுவில் படித்த மகளிர் திட்டப்பகுதிகளில் இடம் பெயர்ந்த குடும்பங்கள் அங்கு மீளக்குடியமர்வது மிகவும் கஷ்டமான காரியமாகக் காணப்படுகின்றது.

அங்கிருந்த வீடுகள் இருந்த இடம் தெரியாத வகையில் அழிக்கப்பட்டுள்ளன. பனை, தென்னை மரங்கள் கண்டபடி தறிக்கப்பட்டுள்ளன. வணக்கஸ்தலங்களில் உடனடியாக பூசைகள் செய்யக்கூடிய நிலையும் காணப்படவில்லை என்றும் அங்குசென்று திரும்பியோர் தெரிவித்தனர்.

இதேசமயம், உயர்பாதுகாப்புவலயமாகக்கருதப்படும் மேற்படி இடங்களில் இருந்து படையினர் வாபஸ்பெற வேண்டும் எனவும் இடம்பெயர்ந்தகுடும்பங்கள் அங்கு மீளவும் குடியமர அனுமதிக்கப்பட வேண்டும் எனவும் கோரி எழுதுமட்டுவாழ் இடம்பெயர்ந்தோர் புனர்வாழ்வுக்கழகம் இன்றுபுதன்கிழமை சாவகச்சேரியிலுள்ள தென்மராட்சி பிரதேச செயலகம் முன்பாக மறியல்போராட்டம் ஒன்றினை நடத்தவுள்ளனர். (உ-77)

# கி. அபி. உத்தியோகத்தர் பயிற்சிப் பட்டறை

(யாழ்ப்பாணம்)

வடக்கு - கிழக்கு மாகாண கிராம அபிவிருத்தித்திணைக்களத்தின் ஏற்பாட்டில் கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர்களுக்கான பயிற்சிப் பட்டறை திருகோணமலையில் 5 தினங்கள் நடைபெற்றது.

கடந்த 1 ஆம் திகதி ஆரம்பமான இப் பயிற்சிப் பட்டறை நேற்றுமுன்தினம்வரை நடைபெற்றது.

மக்களின் சமூக ஒன்றிணைவுச் செயற்றிட்டம், மற்றும் அவர்களின் நலன்களை வழிப்படுத்தல் போன்றவற்றை நோக்கமாகக் கொண்டு இப் பட்டறை நடத்தப்பட்டது. (ஷ-6)

# விளைச்சல் கூடிய மேட்டு நிலப்பயிர்கள் குடாநாட்டில் அறிமுகம்

(கல்வயல்)


மேட்டு நிலப் பயிர்ச் செய்கையில் விளைச்சல் கூடிய புதிய இனங்களைதொடர்புக் கமக்காரர்கள் மூலமாக விவசாயத் திணைக்களம் யாழ். மாவட்டத்தில்அறிமுகப்படுத்தியுள்ளது.

இந்த வகையில், புத்தூர் கமநல சேவை நிலையம் ஆவரங்கால்பகுதியில் மொஸ்பிலான்வெஜ்மகான்ஆகிய கத்தரி இனங்களையும், றொக்கா 70வெங்காயஇனத்தையும்அறிமுகப்படுத்தியுள்ளது.


இதேவேளை, சொட்டு நீர்பாசன முறைப் பயிற்சியும் தொடர்புக்கமக்காரர்களுக்கு வழங்கப்பட்டு வருகிறது. (உ-11 1

116. கேக்கை மென்மையாக்குவதற்காகப் பயன்படுத்தப்படும் பொருள் எது?


**இதனை அவதானித்து கீழ் உள்ள வினாக்களுக்கு விடை தருக.**




117. இதனை ஓர் விளையாட்டு உபகரணம் எனக்கருதி விளையாட முடியுமா?
118. இப்பாம்பு அசைய வேண்டுமாயின் பாம்பில் பொருத்தப்பட வேண்டிய உலோகம் எது? எவ்வாறு இப்பாம்பு அசைந்தது?
119. இதிலே **A, B, C, D** எனக் குறித்துக் காட்டும் ஆங்கில எழுத்துக்கள் குறிப்பவற்றை எழுதுக.




மேலே உள்ள படங்களைப் பயன்படுத்திப் பின்வரும் வினாக்களுக்கு விடை எழுதுக.
120. நிறைய அளக்கப் பயன்படுத்தும் கருவி எது?
121. வெப்பநிலையை அளக்கப் பயன்படுத்தும் கருவி எது?
122. கனஅளவை அளக்கப்பயன்படுத்தும் கருவி எது? நீளம் அளக்கப் பயன்படுத்தும்கருவி எது?



**படங்களைப் பார்த்து விடை எழுதுக.**
123. காற்றுக் கருவி எது?
124. எது அதிருவதால் ஒலி உண்டாகிறது?
125. நரம்புக் கருவி எது?
126. எது அதிருவதால் ஒலி உண்டாகின்றது?
127. தோற் கருவி எது?
128. எது அதிருவதால் ஒலி உண்டாகிறது?



129. நீரால் பரம்பல் அடைவது எது?
130. காரணம் என்ன?
131. காற்றால் பரம்பல் அடைவது எது?
132. காரணம் என்ன?
133. விலங்கால் பரம்பல் அடைவது எது?
134. காரணம் என்ன?



**குழாயை வாயில் வைத்து ஊதுக.**
135. அவதானம் என்ன?
136. இப்பரிசோதனையில் இருந்து என்ன முடிவிற்கு வரலாம்?

**எமது சாயி கல்வி வட்டத்தின் 5ம் தர மாணவர்களுக்கான புலமைப் பரிசில் பரீட்சை மாதிரி வினாத்தாள்களைத் தயாரிக்க உதவிய எமது கல்வி வட்டத்தைச் சார்ந்த அனைத்து ஆசிரியர்கட்கும் எமது நன்றிகள்.**

**பாட ஆலோசனைகளையும் வினாக்களையும் வழங்கிய திருமதிகள். ஜெ.சற்குணபாலன், க.ரஞ்சனாதேவி, சா.வாகீசன், திரு.கு.வாகீசன், திரு.அ.மாசிலாமணி ஆகியோர்க்கும் படங்களைப் பொருத்தமான வகையில் கிறித் தந்த செல்வி.ம.நிஷியாமளா, திருமதி சா.வாகீசன், சித்திரபாட முதன்மையாசிரியர் திரு செ.வரதராஜன் ஆகியோர்க்கும் எமது நன்றிகள்.**

## அபிவிருத்திக்குழுக் கூட்டத்திற்கு பாதுகாப்பு வழங்க ஏற்பாடு

### சங்கரி தலைமையில் நடைபெறும்

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்ட அபிவிருத்திக் குழுக் கூட்டம் எதிர்வரும் 12ஆம் திகதி திங்கட்கிழமை காலை ஒன்பது மணிக்கு யாழ். செயலக கேட்போர் கூடத்தில் தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைவரும், யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான வீ. ஆனந்தசங்கரி தலைமையில் இடம் பெறவுள்ளது.

இக் கூட்டத்தில் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் யாழ்ப்பாண, கிளிநொச்சி அரசாங்க அதிபர்கள், திட்டமிடல் பணிப்பாளர்கள் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

புதிய அபிவிருத்திக் குழுவின் இந்த முதலாவது கூட்டத்தில் யாழ்ப்பாணம், கிளிநொச்சி மாவட்டங்களின் அபிவிருத்திப்பணிகளுக்கென ஒதுக்கப்பட்டுள்ள 37.5 மில்லியன் ரூபாவுக்கான திட்டங்களை இனம்காண்பது - முன்னர் முன்மொழியப்பட்ட அபிவிருத்திச் செயற்றிட்டங்களைப் பரிசீலிப்பது ஆகியன இடம் பெறவுள்ளன.


மேற்படி கூட்டத்தினத்தன்று மேலதிகமாகப் பாதுகாப்பு ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட விருப்பதாக செயலக வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. இதேவேளை யாழ். மாவட்ட அபிவிருத்திக்குழுத் தலைவராக தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவரான வீ. ஆனந்தசங்கரியை அமைச்சர் ஜயலத் ஜயவர்த்தன நியமித்திருப்பது குறிப்பிடத்தக்கது.

(உ-6)

## ஹீரோவின் அதிஷ்டம்









குலுக்கல் மூலம் தெரிவு செய்யப்பட்ட அதிஷ்ட சாலிகளுக்கு ஹீரோ சைக்கிள் வழங்கும் நிகழ்வு கடந்த சனிக்கிழமை யாழ்ப்பாணம் லொயலாஸ் மண்டபத்தில் நடைபெற்றது.

இதில் ஹீரோ சைக்கிள் பிறைவேற் லிமிட்டெட் ஏற்றுமதி முகாமையாளர் சங்கீதசர்மா, கொழும்பு ஹாட்வெயர் விற்பனை முகாமையாளர் பைசால் மற்றும், E.S. பேரம்பலம் சக நிறுவன உரிமையாளர்களான பேரம்பலம் நாகரத்தினம், பேரம்பலம் கணேசலிங்கம் ஆகியோர் மேடையில் அமர்ந்திருப்பதையும் E.S.P. நிறுவனத்திற்கு ஏற்றுமதி முகாமையாளர் சங்கீதசர்மா விஜயம் செய்தபோது உரிமையாளர்கள் நினைவுச் சின்னம் வழங்குவதையும் படங்களில் காணலாம்.

படங்கள்: ரவி

## வில்லூன்றியில் விரிவான ஏற்பாடுகள்

(யாழ்ப்பாணம்)

வில்லூன்றியில் நாளை ஆடி அமாவாசைத் தீர்த்தோற்சவமும் தர்ப்பணாதி அனுஷ்டானங்களும் வழமை போன்று நடைபெறவுள்ளன.

காலை6.00மணிக்கு விசேட அபிஷேக ஆராதனைகள் நடைபெறும். தொடர்ந்து விசேட பூசை, வசந்த மண்டபப் பூசை கோபுர வாயில் தரிசனம் என்பன இடம்பெற்று 8 மணியளவில் தீர்த்தவாரி நடைபெறும்.

காலை 8.00 மணிமுதல் அடியார்கள் தீர்த்தமாடி பிதிர்த் தர்ப்பணங்கள் செய்வதற்குரிய விரிவான ஏற்பாடுகள் அங்கு செய்யப்பட்டுள்ளன. *(ஷ)*

## ஆடிப்பூர திருவிழா நிகழ்வுகள்

(யாழ்ப்பாணம்)

மேல் மருத்தூர் ஆதிபராசக்தி ஆலய அல்வாய் வழிபாட்டு மன்றம் ஆடிப்பூரத் திருவிழாவை முன்னிட்டு விசேட நிகழ்வுகளை நடத்தவுள்ளது.

எதிர்வரும் 11ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 6.00 மணிமுதல் பூசை வழிபாடுகள் இடம் பெறும்.

தொடர்ந்து முற்பகல் 10.30 மணிக்கு ஓய்வு பெற்ற அதிபர் செ.சதானந்தன் தலைமையில் ஆரம்பமாகும் மேடை நிகழ்வில் கரவெட்டி உதவி அரச அதிபர் செ.ஸ்ரீனிவாசன் பிரதம அதிதியாகக் கலந்து கொள்வார்.

அன்னைதாசன் ஆனந்தராசா, கலாநிதி சி.சிவலிங்கராசா ஆகியோர் சிறப்புச் சொற்பொழிவாற்றுவர்.

தொடர்ந்து பட்டி மன்றம், ஊனமுற்றோருக்கு முச்சக்கர வண்டி வழங்கல், ஆதரவு குறைந்த மாணவர்களுக்கு அப்பியாசக் கொப்பி வழங்கல் போன்ற நிகழ்வுகளும் இடம் பெறவுள்ளன. *(ஷ)*

## ஒன்று கூடல்

(யாழ்ப்பாணம்)

அனைத்துப் பொருட்கள் இறக்குமதியாளர்களுக்கான ஒன்று கூடல் எதிர்வரும் 10ஆம் திகதி சனிக்கிழமை மு.ப 10.00 மணிக்கு பளையில் உள்ள வருவாய்ப் பகுதிச் செயலகத்தில் நடைபெறவுள்ளது. இவ் ஒன்று கூடலில் அனைத்து இறக்குமதியாளர்களையும் தவறாது பங்கு பற்றுமாறு யாழ் வணிகர் கழகம் அறிவித்துள்ளது. *(உ)*

## "சனசபிய" குழு 22, 23இல யாழ். விஜயம்

(யாழ்ப்பாணம்)

கியூடெக் நிறுவன ஏற்பாட்டில் குருநாகல் ''சனசபிய'' நிறுவனத்தினர் இம்மாதம் 22, 23 ஆம் திகதிகளில் யாழ்ப்பாணத்திற்கு விஜயம் ஒன்றை மேற்கொள்ளவுள்ளனர்.

இந்தக் குழுவினர் வடக்கின் போர் அழிவுகளைப் பார்வையிடுவதுடன் யுத்தத்தினால் துவண்டு மீளமுடியாத மக்களைச் சந்தித்து கலந்துரையாடவுள்ளனர்.

இரு நாள் விஜயம் செய்யும் இக் குழுவில் 40 பேர் அடங்குகின்றனர். (உ-6)

## வன்னியில் உளவியல் சிகிச்சை

(சுதுமலை)

கிளிநொச்சி, மன்னார், வவுனியா ஆகிய மாவட்டங்களில் உள்ள உளநோயாளர்களுக்குச் சிகிச்சையளிப்பதற்காக உளவியல் வைத்திய நிபுணர் பேராசிரியர் தயாசோமசுந்தரம் அங்கு செல்லவுள்ளார்.

இச்சிகிச்சைகள் மாதத்தில் 3 தினங்கள் நடைபெறவுள்ளன.

தற்போது மேற்படி மாவட்டங்களில் உளநோயால் பாதிக்கப்பட்டவர்கள் அதிகம் இருப்பதாகப் புள்ளி விபரங்கள் மூலம் தெரியவந்துள்ளது. (ஷ-252)

## கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

ப.நோ.கூ. சங்கங்களின் தலைவர்கள் பொது முகாமையாளர்களுக்கான அவசர கலந்துரையாடல் ஒன்று இன்று மு.ப. 10.00 மணிக்கு யாழ். மாவட்ட விவசாய நுகர்ச்சிக் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத்தில் நடைபெறவுள்ளது. இக் கூட்டத்தில் தவறாது கலந்து கொள்ளுமாறு அனைத்து ப.நோ. கூ.சங்க தலைவர், பொது முகாமையாளர்களை யாழ். மா.வி. நு.கூ.ச. சமாசம் கேட்டுள்ளது. (உ)

ஈராக் மீதான அமெரிக்க தாக்குதல்

# ஈரான் - சவுதி கூட்டாக இணைந்து எதிர்க்கும்

(பக்தாத்)

ஈராக் மீதான எந்தவொரு அமெரிக்கத் தாக்குதலையும் தாம் எதிர்க்கப் போவதாக ஈரானும் சவுதி அரேபியாவும் கூட்டாகக் கருத்துத் தெரிவித்துள்ளன.

சவுதியரேபியவெளிவிவகார அமைச்சர் இளவரசர் பௌட் அல்பைசால் ஒருநாள் விஜயத்தை மேற்கொண்டுஈரான் சென்றிருந்த சமயம் அந்நாட்டு ஜனாதிபதி முகமட் ஹதாமியை சந்தித்து கலந்துரையாடியதைதொடர்ந்தே இவ்விரு நாடுகளும் மேற்குறித்தமுடிவுக்குவந்துள்ளன.

சவுதிவெளிவிவகார அமைச்சர் பௌட்சர் வதேச தொலைக்காட்சி ஒன்றுக்கு பேட்டியளிக்கையில், ஈராக் மீதான அமெரிக்க தாக்குதலை எதிர்க்கும் விடயத்தில் தாம் ஒரு மித்த கருத்தைக் கொண்டுள்ளதாகவும் தெரிவித்தார்.

1998 முதல் ஐக்கிய நாடுகளின் ஆயுதப்பரிசோதகர்களை ஈராக்கினுள் நுழைய அனுமதிமறுக்கப்பட்டிருந்தமைகுறித்தும்இந்ததடையை ஈராக் நீக்கியமைகுறித்து வரவேற்பதாகவும் அவர் தெரிவித்துள்ளார். (க-8)

சவுதியில் தடுத்து வைக்கப்பட்டுள்ள

# இலங்கையர் 147 பேரை அழைத்துவருவதில்தாமதம்

(றியாட்)

சவுதி அரேபியாவின் ஜித்தா துறைமுகப்பகுதியில் தடுத்து வைக்கப்பட்டுள்ள 147 இலங்கையர்களை மீண்டும் நாட்டுக்கு அழைத்து வர அந்நாட்டு குடிவரவு குடியகல்வு கட்டுப்பாட்டாளர் எதிர்ப்புத்தெரிவித்துள்ளதாக வெளிவிவகார அமைச்சர் டிரோன் பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

துறைமுகப்பகுதியில் தடுத்துவைக்கப்பட்டுள்ள இவர்கள் அனைவரையும் ஒரே விமானத்தில் இலங்கைக்கு அனுப்ப வேண்டுமென ஜித்தா அதிகாரிகள் தீர்மானம் எடுத்துள்ளதாலேயே குடிவரவுகட்டுப்பாட்டாளர்கள் எதிர்ப்புத் தெரிவித்துள்ளனர்.

துறைமுக அதிகாரிகளுக்கும் குடிவரவு குடியகல்வு கட்டுப்பாட்டாளர்களுக்கும் இடையில் ஏற்பட்ட இச் சிறு பிணக்கை அடுத்தே அங்கிருப்போரை அழைத்து வருவதில் தாமதம் ஏற்பட்டுள்ளது. (உ-8)

# ஆசிய - பசுபிக் . . .

தான இயக்கத்தைப் பற்றியும் கூறுமுன, பீக்கிங்மகாநாட்டில் கலந்து கொண்டு நவசீனத்தைப் பார்க்க நான் பெருமகிழ்ச்சி அடைவதாக அவருக்குக் கூறினேன்.

## ஆபாசத்தின் சிகரம்

அடிமை நாடுகளில் வாழும் மக்களின் வாழ்க்கை சீர்கேட்டின் சிகரமாக விளங்குவதை 'கவுலூன்' ஹோட்டலில் கண்டேன். பிரிட்டிஸ் போர் வீரர்களுடன் நடனமாடிய சீன நங்கையர்பலர்வெளிறியமுகத்துடனும், சாயந்தீட்டப்பட்ட சிவந்தஉதடுகளுடனும், வேறு யாராகிலும் நடனத்துக்குவருவார்களோ என்ற அவாவுடனும் அந்த ஹோட்டலின் மூலைகளில் அமர்ந்திருந்தனர். குலைந்த சிகையுடன் காணப்பட்ட அவர்களிற்சிலர் குட்டிப பிசசுகள் போலக் காட்சியளித்தனர். இத்தகைய நங்கையாசிலரை அடுத்தநாள் ஹாங்கொங் பட்டினத்தைச் சுறறிவரும் போது நானகண்டேன. நவசீனததிலுளள மங்கையரைக் கண்ட பின்புதான் ஹாங்கொங்கில வாழுபசீனப் பெண்களுக்கும் நவசீனத்தில் வாழும் சீனப்பெண்களுக்குமுளள முரண்பாட்டைச் சரிவர உணர முடிந்தது. இந்த இருசாராருமசீனர் என்றஓரே தேசிய இனத்தைச்சேர்ந்தவர்கள் என்று நம்பவே முடியவில்லை. ஒருசமுதாய அமைப்பைப பொறுத்துத்தான் எத்தகைய வளர்ச்சியும் இருகக முடியும் என்பதை இது எடுத்துக் காட்டுகிறது.

ஹாங்கொங்வீதிகளில்நான் போகும் போது, குழந்தைகளுடபட பல பிச்சைககாரர் எனனைப் பின் தொடர்ந்தனர். சீனத்தில்வதிந்தஇரண்டு மாதங்களிலும் ஒருபிச்சைக்காரரைக் கூடநான கண்டதில்லை. ஹாங்கொங்கைச்சுற்றிப்பார்கசும் போது காலியைச் சேர்ந்த ஓர்இலங்கையர் நடத்தும் நகைககடைக்குச் சென்றோம். அவர் வாழ்க்கையில் வளம் பெற்றவராகக் காணப்பட்டார். செப்ரெம்பர் 16 ஆம் நாள் இலங்கைத் தூதுக் குழுவினர் எழுவரும் நண்பகலுக்குச் சிறிது முனபதாக ஹாங்கொங்கை விட்டுப் புறப்பட்டு ஒருமணி நேரத்தில் சீன நாட்டு எல்லையில் உளள இரயில் நிலயத்தை வந்தடைந்தோம். ஹாங்கொங்கைச் சேர்ந்த எல்லைக்குள உற்சாக மற்ற நிலையில் கவலைக் குறிகள முகத்தில் தோன்ற நூற்றுக்கணக்கான பிரிட்டிஸ்வாலிபப் போர்வீரர்கள் அணிவகுத்துப் போன பரிதாபக்காட்சியைக் கண்டேன் தூக்குத் தண்டனைக்குள்ளாகிய மனிதர் போலக் காணப்பட்ட அந்தக் காட்சி என்னைப் பெரிதும் கலக்கி விட்டது.

சீனமண்ணிலே

சீன எல்லை இரயிலடியை நாங்கள் நெருங்கிக் கொண்டிருக்கும் பொழுது, சீன தேசிய கீதத்தின் ஒலி எங்களைத் தழுவித் தவழ்ந்தது. பட்டொளி வீசிப் பறந்த சீனத்தேசியக் கொடியை வணங்கியும், தேசியப்பாட்டுக்களைக் கேட்டும் நான் பெற்ற மட்டற்ற மகிழ்ச்சியை இன்றும் என்னால் நினைவுக்குக் கொண்டுவர முடிகிறது. சீன எல்லை இரயில்வேநிலையத்தை வந்து சேர்ந்ததும்நாம் ஒரு புது உலகத்தையே வந்தடைந்தோம் என்ற எண்ணம் உண்டாயிற்று காண்டனுக்குப் போவதற்கு இரயில் நிலையத்தில் அயல் கிராமங்களிலிருந்து வந்திருந்த நூற்றுக் கணக்கான சீனஆண், பெண், குழந்தைகள் சகலரும் பிரயாணத்திற்காகக் காத்திருந்தனர். அவர்கள் எல்லோரும் தங்கள் வருங்காலத்தைப் பற்றி நம்பிக்கையுடையோராயும், மகிழ்ச்சி யுடையோராயும் காணப்பட்டனர். எளிய உடைகள் அணிந்திருந்தனர் எனினும், அவைகள் நல்ல முறையில் அணியப்பட்டிருந்தன. இரயில்நிலையமும் அதை அடுத்த நிலப்பகுதியும் மெச்சத்தக்க அளவுக்குச் சுத்தமாக இருந்தன. இரயில் நிலையக் கட்டிடத்திற்குள் ஒரு பெரிய படிப்பகத்தில் எண்ணற்ற நூல்களையும் வெளியீடுகளையும் பிரயாணிகள் படித்தவண்ணம் காணப்பட்டனர்.

பிரயாணிகளுக் கென்றே ஒதுக்கப்பட்டகளியாட்ட நிலையத்தில் 'கேரம்' போன்ற பல விளையாட்டுகள் நடைபெற்றன சீனசமாதானக் குழுவில், காண்டன் கிளையிலிருந்து யாங், செல்விசென் என்ற இரு சீன நண்பர்கள் எங்களை வரவேற்றனர். செல்வி சென் எமக்காக வந்த மொழிபெயர்ப்பாளர் என்று தன்னை அறிமுகம் செய்து கொண்டார்! அவர் இலண்டனில் ஆகஸ்போட் பல்கலைக்கழகத்தில் படித்துப் பட்டப் பெற்றமையினால் வெகுதுரித மாக ஆங்கிலம் பேசினார். யாங் என்றவர் நவசீனத்திற்கு எங்களை வரவேற்று வணக்கம் செலுத்தினார் சிறிது நேரம் பேசிய பின், எங்களைச் சாப்பிட அழைத்தனர். சீன மக்கள் சிறு குச்சிகள் கொண்டு சாப்பிடுவோர் என்ற காரணத்தினால் வைக்கப்பட்டிருந்த குச்சிகளை, எங்களிற் சிலர் பயன்படுத்தினர். எங்களிற் பலர் குச்சியால் சாப்பிட்டுப் பழக்கம் அற்றவர்கள் என்ற காரணத்தினால், பலருக்கு முள்ளும் கரண்டியும் வழங்கப் பட்டன.

நன்றி

நான் கண்ட நவசீனா

# அஸாம் மாநிலத்தில் தொற்று நோய் 100க்கும் அதிகமானோர் பலி

(புதுடில்லி)

இந்தியாவின் அஸாம் மாநிலத்தில் தொற்று நோய் காரணமாக 100க்கும் அதிகமான பொதுமக்கள் பலியாகியுள்ளனர்.

அஸாம் மாநிலத்தில் தொடர்ச்சியாக பெய்துவரும் மழைகாரணமாகவே தொற்று நோய்கள் வேகமாகப் பரவி வருவதாக வைத்திய அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

அங்கு பெய்த பெருமழை காரணமாக 5 ஆயிரத்திற்கும் அதிகமான கிராமங்கள் பாதிக்கப்பட்டுள்ளமை தெரிந்ததே.

தொற்று நோய்கள் மேலும் பரவுவதைத் தடுக்கும் நோக்குடன், அதிகாரிகளை உடனடி நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு மத்திய அரசு கேட்டுள்ளது. (ஷ-8)

ஜப்பான் தேசிய

# புலமைப் பரிசிலுக்கு விண்ணப்பிக்கலாம்

(யாழ்ப்பாணம்)

ஜப்பான் தேசிய புலமைப் பரிசிலுக்காக விண்ணப்பம் கோரப்பட்டுள்ளது.

18 - 35 வயதுக்குட்பட்ட யாழ். வலயப் பாடசாலைகளில் இடைநிலை வகுப்பில் கற்பிப்பதுடன் கணனியைப் பாடசாலையில் கற்பிக்கும்; கையாளும் ஆங்கில அறிவுத் தகைமையும், தேர்ச்சியும் பெற்றவர்கள் இதற்குத் தகுதியுடையவர்களாவர்.

விருப்பமுடையவர்களைசுய விபரங்கள, தகைமைச் சான்றிதழ், அதிபரின் சிபார்சு பெற்ற விண்ணப்பம் என்பவற்றோடு நாளை மதியத்திற்கு முன்பாகயாழ். வலயக் கல்விப் பணிமனைக்குச் சமுகமளிக்குமாறு பணிப்பாளர் திருமதி செ. மகாலிங்கம் கேட்டுள்ளார். (உ-2)

# திருக்குறளை தேசிய நூலாக்க கோரிக்கை

(சென்னை)

உலகப் பொதுமறையான திருக்குறளை தேசிய நூலாக அறிவிக்க வேண்டுமென்று தமிழக சட்டப் பேரவைத் தலைவர் கா. காளிமுத்து இந்திய மத்திய அரசுக்கு வேண்டுகோள் விடுத்துள்ளார். (ஷ-225)

# கோட்டை வட்டார மக்கள் மீளக்குடியமர ஏற்ற உதவிகள்வழங்குவாரில்லை

(யாழ்ப்பாணம்)

கோட்டை வட்டார மக்களைமீளக்குடியமர படைத்தரப்பு அனுமதி வழங்கியும், அடிப்படை வசதிகள்ஏதுமற்று இருப்பதால் அங்கு மீளக்குடியமர மக்கள் ஆர்வம் காட்டாது தொடர்ந்தும் முகாம்களிலும், உறவினர் வீடுகளிலும் தங்கியுள்ளனர்.

மேற்படிபகுதி மக்கள்1983 ஆம் ஆண்டு முதல் இடம் பெயர்ந்து மிகவும் இன்னலுற்றுவருவதுடன், வறியவர்களான இவர்களின் இல்லிடங்கள் சொத்துக்கள் போரினால் அழிக்கப்பட்ட நிலையில் மீளக்குடியமர ஏற்ற பொருளாதார வசதிகளும் அற்றவர்களாகவே காணப்படுகின்றனர்.

இவர்கள் விடயத்தில் மனிதாபிமான உதவிகள் புரிந்து அவர்களை மீளக்குடியமர்த்த ஏற்றவழிவகைகளை வழங்க அரச சார்பற்ற நிறுவனங்கள் முன்வரவேண்டும் என யாழ். மாநகரசபை உறுப்பினர் செல்லையா விஜயரட்ணம் கோரிக்கை விடுத்திருப்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது. (உ)

# படையினர் வசம் பல ஆலயங்கள்

(கொழும்புத்துறை)

கொழும்புத்துறைப் பகுதியில் இருந்து 1999 ஆம் ஆண்டில் பொதுமக்கள் வெளியேறியதைத் தொடர்ந்து அப்பகுதி இந்து, கிறிஸ்தவ ஆலயங்கள் பலவும் பூஜை வழிபாடுகளின்றி படையினரின் கட்டுப்பாட்டில் உள்ளன. (உ-262)

# அலங்கார உற்சவம்

(யாழ்ப்பாணம்)

கந்தரோடை வீரகத்திவிநாயகர் திருக்கோவில்வருடாந்த அலங்கார உற்சவம்எதிர்வரும் 1? ஆம் திகதி திங்கட்கிழமை ஆரம்பமாகித் தொடர்ந்து10 தினங்கள் நடைபெறவுள்ளது.

உற்சவ தினங்களில்தினமும் இரவு 8.00 மணிக்கு வசந்த மண்டபப் பூசை ஆரம்பமாகி அதனைத் தொடர்ந்துசுவாமி வீதி யுலா இடம் பெறும். (ஷ)

# முக்கிய கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

தொழில் பயிற்சித் திணைக்கள் மாவட்ட ஆலோசனைக் குழுவின் முக்கிய கலந்துரையாடல் ஒன்று எதிர் வரும் 15ஆம் திகதி வியாழக்கிழமை மு. ப. 10 மணிககு யாழ். செயலக மாநாட்டு மண்டபத்தில் அரசாங்க அதிபர் கே. சண்முகநான் தலைமையில் நடைபெறவுள்ளது.

யாழ். செயலக தொழில் துறைத் திணைக்கள அதிகாரிகள் அரச, அரசசார்பற்ற நிறுவனப் பிரதிநிதிகள் ஆகியோர் இதில் கலந்து கொள்ளவுள்ளனர். (உ-6)

# 'ஐசுபி' உற்பத்திகளுக்கு தெற்கில் சந்தை வாய்ப்பு

## அமைச்சர் ஜயலத் உறுதியுரை

(யாழ்ப்பாணம்)

வடபகுதி உற்பத்திப் பொருட்களுக்கு தென்பகுதியிலும் வெளிநாடுகளிலும் சந்தை வாய்ப்பைப் பெற்றுக் கொடுப்பதற்கு உரிய வசதிகளைச் செய்துதருவதாகபுனர் வாழ்வு, புனரமைப்பு மற்றும் அகதிகள் மீள் குடியமார்வு அமைசர்டாக்டர் ஜயலத் ஜயவர்த்தனா உறுதியளித்துள்ளார்.

யாழ். மத்திய கல்லூரியில் நடைபெற்ற வர்த்தகக் கண்காட்சி ஆரம்ப வைபவத்தில் கண்காட்சியைத் திறந்து வைத்தபின்அங்கு காட்சிக்கு வைக்கப்பட்டிருந்த உள்ளூர் உற்பத்திகளை பார்வையிட்ட போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

குறிப்பாக ஐசுபி தொழிலகத்தினால் தயாரிக்கப்படும் ஐசுபி உற்பத்திகளை கட்டுநாயக்க விமானவிற்பனை நிலையத்தில் வைத்து விற்பனை செய்வதற்குரிய இடவசதியைப் பெற்றுத் தருவதாக அமைச்சர்சுன்னாகம் ப.நோ.கூ சங்கத் தலைவர் சி.குமாரவேலிடம் உறுதியளித்தார். (ஷ-6)

வத்திக்கான் மறைபோதனைக் குழுவின்

# இலங்கை சபைபிரதிநிதிகள் ஆயர் இல்லத்தில் சந்திப்பு

(யாழ்ப்பாணம்)

பாப்பரசர்இரண்டாவதுஅருளப்பர் சின்னப்பரின் வத்திக்கான் மறைபோதனைக் குழுவின் இலங்கைச் சபைத்தலைவரான வண. பிதா ரொனி மார்டீன் தலைமையிலான குழு ஒன்று கடந்தவாரம் யாழ்ப்பாணத்திற்கு வருகை தந்திருந்தது.

இக்குழுவினர் யாழ். ஆயர் இல்லத்தில் கலந்துரையாடல் ஒன்றையும் நடத்தினர்.

சமாதானத்திற்கும் நல்லெண்ணத்திற்குமான தூதுக்குழுவின் தலைவர் டி. ஆர். அருமைநாயகம் தலைமையில் நடைபெற்ற இக்கலந்துரையாடலில்வண. பிதாக்களான சி. ஜி. ஜெயக்குமார், ஜே. பி. ஈ. செல்வராஜா எஸ். பி. நேசகுமார் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

இக்கலந்துரையாடலில் வடக்கு- கிழக்கு சிறுவர்களுக்கிடையில் சிநேகபூர்வ உறவுகளை வளர்த்துக் கொள்ளல் சம்பந்தமாகவும் சிறுவர் உரிமைகள் தொடர்பாகவும் முக்கியமாகஆராயப்பட்டதுடன்,

இலங்கை வாழ் மக்களின் மனங்களில் ஆழப்பதிந்துள்ள யுத்தக்கொடூரங்கள் நீங்கி சாந்தியும் சமாதானமும் ஒளிர வேண்டிப் பிரார்த்தனைகளும் இடம்பெற்றன.

மேற்படி போதனைக் குழுவினருடன்சிங்கள அருட்சகோதரிகளும், பிரெஞ்சுஊடகவியலாளரும் வருகைதந்திருந்தமையும் இங்கு குறிப்பிடத்தக்கது. (ஷ-6)

கருவியும் காலமும் செய்கையும் செய்யும்
அருவினையும் மாண்டது அரசு

குறள்

# வலம்புரி

## கீழ்இறங்கும் அரசு

நாட்டில் அரசியல் ரீதியான நெருக்கடி உச்சகட்டத்தை அடைந்துள்ளது. ஜனாதிபதிசந்திரிகா குமாரதுங்காவும், பிரதமர் ரணில்விக்கிரமசிங்கா தலைமையிலான அமைச்சரவைக்கும் இடையில் ஏற்பட்ட முறுகல் நிலை உச்சகட்டத்தையடைந்ததையடுத்து பாராளு மன்றம் கலைப்புப் பற்றிய சிந்தனை ஆளுங் கட்சியான பொதுஜன ஐக்கிய முன்னணியிடம்எழுந்துள்ளது.

ஜனாதிபதி தனக்கு இருக்கக்கூடியதான அதிகாரங்களைப் பயன்படுத்தி பாராளுமன்றத்தைக் கலைக்கலாம் என அரசியலவதானிகள் எதிர்பார்த்துக்கொண்டிருந்த வேளையில் ஆளுங்கட்சியான ஐக்கிய தேசியமுன்னணி தானாகவே முன்வந்து பாராளுமன்றத்தைக்கலைக்குமாறு ஜனாதிபதியிடம் கேட்கும் துர்ப்பாக்கிய நிலை ஏற்பட்டுள்ளது.

ஜனாதிபதி முறையை நீககுதல், நிறைவேற்று ஆட்சிமுறையை அமுல்படுத்துதல், கட்சிவிட்டுக் கட்சிதாவுவதை ஏற்றுக் கொள்ளுதல்ஆகியமூன்று நிபந்தனைகளையும்ஜனாதிபதி ஏற்கவேண்டுமெனவும், அதனை ஜனாதிபதி ஏற்கத்தவறினால், பாராளுமன்றத்தைக் கலைக்கும் தீர்மானத்தை பாராளுமன்றத்தில் நிறைவேற்றி அதனை அமுல்படுத்துமாறு ஜனாதிபதியிடம கோருவதெனவும் ஐ.தே. கட்சியின் நிறைவேற்றுக் குழுக்கூட்டத்தில் முடிவுசெய்யப்பட்டுள்ளது.

மேற்கூறப்பட்ட மூன்று நிபந்தனைகளையும்ஜனாதிபதி ஏற்கப்போவதில்லையென்பது பிரதமர் ரணிலுக்குத் தெரியாத விசயமல்ல. எனினும் பிரதமரைப் பொறுத்தவரை பொதுத்தேர்தல் ஒன்றை சந்திக்கவே அவர் விரும்புவதுதெளிவாகிறது ஜனாதிபதிக்கு இருக்கக்கூடிய அதிகாரங்களை ஐ. தே. முன்னணி அரசு அலட்சியப்படுத்தியதன் விளைவு வெளிவரத்தொடங்கியுள்ளது. ஜனாதிபதி பாராளுமன்றததைக் கலைப்பாா என்ற நிலைமாறி ஐ. தே. முன்னணி அரசு பாராளுமன்றததைக் கலைக்குமாறு ஜனாதிபதியிடம் கோரும் பரிதாபம் ஜனாதிபதியிடம் இருக்கும் நிறைவேற்று அதிகாரம் தந்தபரிசாகும்.

# ஆசிய - பசுபிக் நாடுகளின் சமாதான மாநாடு

# புது உலகம் வந்தடைந்த அனுபவத்தை தந்தது

1952ம் ஆண்டில் சீனத்தலைநகரில் நடைபெற்ற சமாதான மாநாட்டில் இலங்கைக்குழுவினருடன் சென்று கலந்துகொண்ட பயண அனுபவங்கள்.

**கே. வைகுந்தவாசன்**

1952ம் ஆண்டு அக்டோபர் மாதம் பீக்கிங்கில் நடந்த ஆசிய பசிபிக் நாடுகளின் சமாதான மாநாட்டில் கலந்து கொள்ள இலங்கைத் தூதுக் குழுவினரில் ஒருவராக நான் சென்றது நவசீனத்தைப் பார்க்க எனக்கு வாய்ப்பளித்தது. இலங்கைத் தூதுக் குழுவைச் சேர்ந்த பத்து உறுப்பினரும் ஒன்றாய்ப் பிரயாணமாகப் பல இடையூறுகளால் முடியாமற் போய் விட்டது. தூதுக் குழுவின் தலைவர் சுவாமி நாரவில தம்மரத்தினாவும், ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பாராளுமன்றஉறுப்பினரான எஸ் டி. பண்டாரநாயக்காவும் கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்த என். சண்முகதாசனும் செப்ரெம்பர் மாதம் ஆறாம் நாள் புறப்பட்டனர். என் மனைவியும் நானும் செப்ரெம்பர் மாதம் 13ம் நாள் புறப்பட்டோம். குழுவினரில் ஏனையோரான லங்கா சமசமாசக் கட்சியைச்சேர்ந்த டி.பி.ஆர். குணவர்த்தனாவும் ஸி. கிக்கடுவகேயும், டாக்டர் என். எம். பெரேராவை தலைமையாகக் கொண்ட சமசமாசக் கட்சியைச் சேர்ந்த எட்மன்ட் சமரக்கொடி (இலங்கைப் பாராளுமன்ற அங்கத்தினர்) டாகடர் கெக்டர் பெர்னாண்டோ கொழும்பு நகராண்மைக் கழக உறுப்பினரான இரத்தின வீரா (கம்யூனிஸ்ட் கட்சி) ஆகியோரும் செப்ரெம்பர் 14, 15ம் நாட்களில் சீனா நோக்கிப் பிரயாணமாயினர்.

### வெளிநாடுகளில் வாழும் சீனர்களின் பிரதிநிதிகள்

மனைவியுடன் நான் இலங்கையை விட்டு வானமார்க்கமாகச் சென்னை வழியாகக் கல்கத்தாவிற்கு அடுத்த நாட்காலை போய்ச் சேர்ந்தோம் ''டம் டம்'' என்ற கல்கத்தா விமான நிலையத்தில் எண்ணற்ற சீன மக்களைக் கண்டேன். விசாரித்த அளவில் அவர்கள் அனைவரும் தங்கள் தாய் நாட்டிற்க வெளிநாடுகளில் வாழும் சீன மக்களின் பிரதிநிதிகளாக அக்ரோபர் முதல் நாளன்று பீக்கிங்கில் கொண்டாடபபடும் சீன தேசிய விழாவில் கலந்து கொள்ளப்போகிறார்கள் என்பதை அறிந்து கொண்டேன். பீக்கிங்கை நோக்கித்தான் நாங்களும் புறப்பட்டோம். என்பது அறிந்து அக மகிழ்ந்தனர். அங்கு கூடிய சீன மக்கள் அனைவரும் இலங்கையில் வாழ்கின்ற சீன மக்களின் பிரதிநிதிகள் யாராவது பீக்கிங்கிற்குப் போகின்றார்களா?' என்று ஆர்வத்துடன் கேட்டனர்.

சீனர் சிலரே இலங்கையில் வாழ்கின்றனரென்றும், அவர்களுடையபிரதிநிதிகள் யாராவது வந்தார்களா என்பதை நிச்சயமாகச் சொல்ல முடியவில்லை என்றும் கூறினேன். தென்கிழக்கு ஆசியப் பிரதேசத்தில் ஒரு கோடிக்கு மேல் சீனர்கள் வாழ்கின்றார்கள் என்று கேட்டுஅதிசயமுற்றேன்·வெளிநாடுகளில்வாழும் சீனமக்கள் தங்கள் தாய் நாடாகிய நவசீனத்திடம் கொண்டுள்ள எல்லையற்ற ஆர்வம் சீனம் போய்ச் சேரும் வரை என் சிந்தனையைத் தூண்டிச்சுடர் விடச் செய்தது. அன்று நண்பகல் பீ.ஒ.ஏ.ஸி) (B O. A. C) விமானமூலமாக மாலை இறங்கூன்வந்தடைந்தோம். அடுத்த நாட் காலை பிரயாணம் தொடரவேண்டும் என்ற காரணத்தினால் அன்று இறங்கூன் பட்டினத்தையும் அடுத்துள்ள புகழ் பெற்ற புத்த கோவிலையும் பார்த்தோம்.

### இலங்கை அரிசித்தூதர்

அடுத்த நாட்காலைஇலங்கை அரசாங்கத்தின் சார்பில் பர்மாவுக்குத் தூதராகச் சென்ற சுசந்ந டி.பொன்சேகாவுக்கும் பர்மா நாட்டில் உள்ள சீன நாட்டுத்தூதுவருக்குமிடையில் நடந்த அன்னியோன்யமான உரையாடல் கண்டு பேராச்சரியத்துள் மூழ்கினேன் முப்பது வயதிற்குட்பட்ட சீனத்தூதுவரின்தோற்றம் என்னைக் கவர்ந்தது. இலங்கைக்கு அரிசி வாங்கும் பேச்சுவார்த்தைகளில் கலந்து கொள்வதற்காக இலங்கைத் தூதர் சீனாவுக்கு எங்களுடன் வருகிறார் என்பது எனக்கு முன் கூட்டியேதெரியும். அவர் விமானத்தில் எனக்கு முன்னிருந்த இடத்தில் வந்தமர்ந்தது மகிழ்ச்சியூட்டியது. நான் பர்மா, சீனா ஆகிய நாடுகளைப் பற்றியும்' எல்லாவற்றிற்கும் மேலாக அரிசி வாங்குவது பற்றிய விபரங்களையும் அவரிடம் அறிய வேண்டும் என்ற பேரவா கொண்டிருந்தேன். ஆகையினால், அவர் வந்துஎனக்கு முன் அமர்ந்ததைப்பெரிதும் வரவேற்றேன். இலங்கைச் சட்டசபையில் அவர் முன்னாள் உபசபாநாயகராக இருந்தவர். அந்த நாட்களில் இலங்கை ஊழியர் சங்கத்தின் பிரதிநிதியாக அவரைச் சந்தித்துள்ளேன். அவர் வேலையுடன்-அரிசியுடன் நெருங்கிய தொடர்பு கொண்ட சமாதானக் குழுவினரின் பிரதிநிதியாக நாங்கள் சீனாவிற்குப் போகின்றோம் என்று கூறியவுடன் அவர் மனசாரச் சிரித்தார். நாங்கள் பல பொருட்களைப் பற்றி உரையாடிக் கொண்டே போனோம். முக்கியமாக சீனா பற்றியும் குறிப்பாக அரிசி பற்றியும் பேசினோம். அரசாங்க அலுவலாளர்கள் ஒரு சிலரிடமிருந்தும் அரசியல் வாதிகள் சிலரிடமிருந்தும் பலத்த எதிர்ப்பைத் தாம் எதிர் பார்ப்பதாகவும், எனினும் பீக்கிங்கில் நடத்தப்போகும் சீன அரிசி வியாபார ஒப்பந்தம் இறுதியாக வெற்றியடையும் என்று தாம் நம்பிக்கையுடனிருப்பதாகவும் அவர் தெரிவித்தார். குறுகிய மூன்றாண்டு காலத்தில் சமூக அமைப்பையே மாற்றி, பொருளாதார வளர்ச்சியைத் துரிதப்படுத்தி வெளிநாடுகளுக்குதன்தேவைக்குமிஞ்சிய அரிசியை அனுப்பத் தகுந்த முறையில் நவசீனத்தை நல்வழிப்படுத்திய சீனப் பெருமக்களைப் பெரிதும் புகழ்ந்தார்.

பர்மாவின் நிலைமை திருப்தியற்ற நிலையிலுள்ளதாக அவர் தெரிவித்தார். பர்மாவின் சில பகுதிகளில் என்ன தான் நடக்கின்றது என்று அறியாத நிலையில் பர்மா அரசாங்கம் இருப்பதாக அவர் கூறினார். இவை எப்படியிருப்பினும், இலங்கையிலுள்ள குட்டை குழப்பும் அரசியல் சூழ் நிலையிலிருந்தும் தாம் விலகியிருப்பதில் மகிழ்ச்சியே என்றும் அவர் கூறினார். சீன அரிசி பற்றிப் பேசும் போது, பர்மாவினுடைய பரந்த நெல்வயல் பரப்புக்கு மேலே பறந்து கொண்டிருந்தோம். எல்லையற்ற பரப்பு! வளம் பொருந்திய வயல்கள், ஏன் முன் போலவே பர்மாவிடமே நமக்கு வேண்டிய அரிசியை வாங்கக் கூடாது என்ற கேள்வி எழும்பி, என்னை ஆச்சரியத்துள் மூழ்கடித்தது. திடீரெனப் பர்மாவில் விளையும் அரிசி முழுவதையும் உட்கொள்ளத்தக்க அளவிற்கு ஒரே இரவில் அங்குள்ள மக்கள் தொகை இரட்டித்து விட்டது என்று யாரும் கூறிவிட முடியாது. பர்மாவிலுள்ள அமெரிக்கர் சிலர் டாலர் துணை கொண்டு பர்மா அரிசி அத்தனையும் வாங்குகிறார்கள். அரிசியின் ருசியே தெரியாத அமெரிக்கர்கள் தாம் உட்கொள்வதற்காக வாங்கவில்லை. ஆனால் எதற்காக வாங்குகிறார்கள் என்பது யாரும் கூற முடியாத ஒரு மர்மம்.

எண்ணெய் எடுப்பதற்காக விமானம் தாய்லாந்தின் தலைநகரமான பாங்கொக் என்ற விமான நிலையத்தை வந்தடைந்து ஒருமணி நேரம் நின்றது. அது மிக அழகிய தற்கால விமான நிலையம். தொடர்ந்து பிரயாணமாகி ஹாங்கொங்கை அன்று மாலை போய்ச் சேர்ந்தோம். விமானத்தை விட்டு வெளியேறியதும் பொன்சேகாவை வரவேற்க வந்திருந்த பாராளுமன்ற உணவிலாக்கா செயலாளர் வி. குமாரசாமியை விமான நிலையத்தில் கண்டேன். சில அலுவலாளர்கள் பின்தொடர, அவர்கள் விமான நிலையத்தை விட்டுப் புறப்பட்டனர்.

### ஹாங்கொங்கில் வரவேற்பு

மூன்று இளம் சீன நண்பர்கள் சீன சமாதானக் குழுவின் சார்பில் எங்களை வரவேற்றனர். டோங்சை-சி, லீகுஎக்-சொங், தாங் எஸ்·சூ என்ற மூவருமே அவர்கள். முதலில் எங்களுக்கு வணக்கம் செலுத்தி வரவேற்ற டோங்சை-சி யின் முகத்தை நான் என்றுமே மறக்க மாட்டேன். அவருடைய முகம் நவசீனத்தைப் பற்றி நாம்படித்தவற்றையும் கேட்டவற்றையும் ஒருங்கே சுடர்பரப்பி பிரகாசிப்பது போல் தோன்றியது. புத்திக்கூர்மையும் தன்னம்பிக்கையும் அவர் கண்களில் ஒளிவீசின,

ஹாங்கொங்கின் சுங்க இலாகா எங்களுக்கு எந்த வகையான தொல்லையையும் தரவில்லை. நாங்கள் பீக்கிங் சமாதான மகாநாட்டுக்குச் செல்லுபவர்கள் என்று கூறியவுடன் அந்த பிரிட்டிஷ் சுங்க அதிகாரி பாஸ்போர்ட்டையும், பெட்டிகளையும் பார்த்ததற்கு வருத்தம் தெரிவிப்பவர் போலக் காணப்பட்டார் ஹாங்கொங்கின் பிரிட்டிஷ் அடிமை அரசாங்கம், அதற்கு மேல் ஒருதடையுமின்றி அனுமதி தந்தது. சிங்கம் போன்ற சீன நாட்டை எவ்வளவு மதிப்புடன் நடத்தத் தலைப்பட்டு விட்டது என்பதற்கு எடுத்துக் காட்டாகும்.

சீன நண்பர்கள் நாங்கள் தங்கவேண்டிய 'கவுலூன்' ஹோட்டலுக்கு அழைத்துச் சென்றனர். அங்கே பிலிப் குணவர்த்தனா, எட்மன் சமரக்கொடி, டாக்டர் பெர்னாண்டோ ஆகியோர் சிங்கப்பூர் மார்க்கமாக முன்கூட்டியே வந்து தங்கியிருந்ததைக் கண்டோம். ரத்தின வீரா, கிக்கடுவகே இரு சமாதானத் தூதுக் குழுவைச் சேர்ந்தவர்களும் வேறு விமான மூலம் காலம் தாழ்த்தி எங்களோடு வந்து சேர்ந்தனர். ஹாங்கொங்கிலுள்ள ஒருமுற்போக்குத் தினத்தாளின் நிருபர் பேட்டி காணவந்திருந்தார். இலங்கையிலுள்ளஅரசியல் நிலைமை பற்றியும், சமா

(8ம் பக்கம் பார்க்க)

## தினசரி தியானம்

## பேரமைப்பு

இம் மாநிலத்தில் இருந்தபடியே யிருந்து
சும்மா அருளைத் தொடருநாள் எந்நாளோ?

- தாயுமானவர்

அண்டநாயகா, நீ அண்டங்களை அமைத்திருக்கும் முறையைக் காண்போர் மனங் கலங்குவதுமில்லை, குறை கூறுவதுமில்லை.

இயற்கையின் அமைப்பு அருளே வடிவெடுத்தது. இம்மியளவு கேட்டையோ பட்ச பாதத்தையோ அதில் காணமுடியாது. நுண்ணிய தளிரை இரக்கத்தோடு அது பாதுகாக்கிறது. பெருவலிவு படைத்த ஒன்று அவ்வலிவை முறை தவறிக் கையாளாதிருக்கும்படி இயற்கை பார்த்துக் கொள்கிறது. அது கேட்டைக் களையவும் நலத்தைக் காக்கவும் செய்கிறது. இவ்வமைப்பை அறிவதும், அருளை அறிவதும் ஒன்றே; அதை அறிபவர் அமைதி பெறுகின்றனர்.

ஸ்ரீமத் சுவாமி சித்பவானந்தர்.

கிறிஸ்ரல் சென்ரர்
நெல்லியடி
G.C.E. O/L
சமூகவியலும் வரலாறும்
அலகு ரீதியான மீட்டல்
வினா விடை வகுப்புகள்
ஆரம்பம் 07.08.2002 இன்று
முற்பகல் 11 மணி (ப.நே)
BY.E.A.ஜெயன்
[C/4822]

திரு ரீயூசன் சென்ரர்
கோண்டாவில்
A/L DAY CLASS
கலை வர்த்தகப் பிரிவு
TA - திரு.லிங்கம்
LOG - திரு.சயந்தன்
H.C - பிரபல ஆசிரியர்
GEO - திரு.வேலா
ECO - திரு.சண்
ACC - திரு.தவா
ஆரம்பம் - 12.08.2002.
(திங்கள்) (C/4820)

### அமைச்சர்...

கும் புலிகளுக்கும் இடையில் நடைபெறவுள்ள சமாதானப் பேச்சுவார்த்தைகளுக்கு முன்னதாக முஸ்லிம் மக்களின் எதிர்காலம் குறித்து அரசாங்கமும், விடுதலைப்புலிகளும் தெளிவான பதில் தரவேண்டும் என்ற நிலைப்பாட்டில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் என்றுமே மாறாது என்றும் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை இவ்விடயம் குறித்து புலிகளுடன் பேச்சுவார்த்தை ஒன்றில் ஈடுபடப்போவதாக முஸ்லிம் காங்கிரஸ் கட்சி வட்டாரங்கள் தெரிவித்தன.(இ-8)

# தச்சனாமடுப் படுகொலை வழக்கு மன்னாருக்கு மாற்றம்

(மன்னார்)

மன்னார் மடுத் தேவாலயத்திற்கு அருகாமையில் உள்ள தச்சனாமடுப் பகுதியில் இடம்பெற்ற படுகொலை சம்பந்தமாக இன்று வவுனியா நீதி மன்றில் நடைபெறவிருந்த அடையாள அணிவகுப்பு மன்னார் மாவட்ட நீதிமன்றத்திற்கு மாற்றப்பட்டுள்ளது.

தச்சனாமடுப் பகுதியில் இடம்பெற்ற இப் படுகொலை தொடர்பாகக் கைது செய்யப்பட்டுள்ள 12 சந்தேக நபர்களும் அனுராதபுரம் சிறைச்சாலையில் இருந்து இன்று மன்னாருக்கு பலத்த பாதுகாப்புடன் அழைத்து வரப்படவுள்ளனர்.

இப்படுகொலைச் சம்பவம் மன்னார் பொலிஸ் பகுதியில் இடம்பெற்றுள்ளதாலேயே மன்னார் மாவட்ட நீதிமன்றத்திற்கு இவ் வழக்கு மாற்றப்பட்டுள்ளதாக வவுனியா நீதிமன்ற வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. (வ)

# பலன் தரும் பதிகங்கள்

## கண் பார்வை பெற உதவும் பதிகம்

சுந்தரமூர்த்தி சுவாமிகள் திருஒற்றியூரில் சங்கிலி நாச்சியாரை இரண்டாவதாகத் திருமணம் புரிந்து கொள்கிறார். அவ்வாறு மணம் புரியும் பொழுது சங்கிலியாரை விட்டுப் பிரியேன் என்று சத்தியமும் செய்து கொடுக்கிறார். காலம் செல்கிறது. திருவாரூர் பெருமானை கண்டு வணங்கும் ஆசை மிகுகிறது சுந்தரமூர்த்தி நாயனாருக்கு.

திருஒற்றியூரை விட்டுப் புறப்படுகிறார். எல்லையைத் தாண்டிய உடன் கண்களை இழந்து விடுகிறார். காஞ்சிபுரம் வருகிறார். அங்குள்ள திருவேகம்பப் பெருமானை வேண்டி, இப்பதிகத்தைப் பாடி கண் பார்வை பெறுகிறார்.

இப்பதிகம் கண் ஒளியை அளிக்கும் மேலான பதிகமாகும். பல அன்பர்கள் முழு நம்பிக்கையுடன் ஓதி கண்பார்வையைப் பெற்றுள்ளார்கள்.

திருச்சிற்றம்பலம்

திருக்கச்சியேகம்பம் பண்: *தக்கேசி*

ஆலந்தான் உகந்து அமுது செய்தானை
ஆதியை அமரர் தொழுதேத்தும்
சீலந்தான் பெரிதும் உடையானைச்
சிந்திப்பார் அவர் சிந்தை உளானை
ஏலவார் குழலாள் உமை நங்கை
என்றும் ஏத்தி வழிபடப்பெற்ற
காலகாலனைக் கம்பன் எம்மானைக்
காணக் கண் அடியேன் பெற்றவாறே.

உற்றவர்க்குதவும் பெருமானை
ஊர்வதொன்றுடையான் உம்பர்கோனைப்
பற்றினார்க்கென்றும் பற்றவன்தன்னைப்
பாவிப்பார் மனம் பாவிக்கொண்டானை
அற்றமில் புகழாள் உமை நங்கை
ஆதரித்து வழிபடப் பெற்ற
கற்றைவார் சடைக் கம்பன் எம்மானைக்
காணக்கண் அடியேன் பெற்றவாறே.

திரியும் முப்புரந் தீப்பிழம்பாகச்
செங்கண்மால் விடை மேல் திகழ்வானைக்
கரியின் ஈருரி போர்த்துகந்தானைக்
காமனைக் கனலா விழித்தானை
வரிகொள் வெள் வளையாள் உமைநங்கை
மருவியேத்தி வழிபடப்பெற்ற
பெரியகம்பனை எங்கள் பிரானை
காணக்கண் அடியேன் பெற்றவாறே.

குண்டலம் திகழ் காதுடையானை
கூற்று தைத்த கொடுந்தொழிலானை
வண்டலம்பு மலர்க் கொன்றையினானை
வாளராமதி சேர் சடையானைக்
கொண்டையந் தடங்கண் உமைநங்கை
கெழுமியேத்தி வழிபடப்பெற்ற
கண்டம் நஞ்சுடை கம்பனெம்மானைக்
காணக் கண்ணடியேன் பெற்றவாறே.

வெல்லும் வெண்மழு ஒன்றுடையானை
வேலைநஞ்சுண்ட வித்தகன் தன்னை
அல்லல் தீர்த்தருள் செய்யவல்லானை
அரு மறை அவையங்கம் வல்லானை
எல்லையில் புகழாளுமை நங்கை
யென்றும் ஏத்தி வழிபடப்பெற்ற
நல்ல கம்பனை எங்கள் பிரானைக்
காணக் கண்ணடியேன் பெற்றவாறே.

# புத்தளம்-மன்னார் வீதியை திறக்க புலிகள் இணக்கம்

(மன்னார்)

புத்தளம் - மன்னார் வீதியைப் பொதுமக்களின் பாவனைக்காக திறந்துவிடுவதற்கு விடுதலைப்புலிகள் இணக்கம் தெரிவித்துள்ளனர் என்று வன்னிப் புனர்வாழ்வு புனரமைப்பு அமைச்சர் நூர்தீன் மசூர் தெரிவித்துள்ளார்.

மன்னாரில் அண்மையில் விடுதலைப்புலிகளின் முக்கிய தலைவர்களுடன் நடத்திய பேச்சுவார்த்தையை அடுத்து இவ் இணக்கம் ஏற்பட்டுள்ளதாக அமைச்சு வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இப் பாதையைத் திறந்து புனரமைப்புச் செய்வதற்கு சுமார் 55 மில்லியன் ரூபா தேவைப்படுவதாகவும் அதற்கு ஆசிய அபிவிருத்தி வங்கி உதவ முன்வந்துள்ளதாகவும் மேலும் தெரிவித்துள்ளன. (இ-8)

### ஜனாதிபதியின்...

எந் நேரம் நடந்தாலும் அதற்கு முஸ்லிம் காங்கிரஸ் கை கொடுக்கத் தயாராக இருக்கிறது.

ஆனால் தற்போது நாட்டில் நிலவும் பொருளாதார நிலைமை ஒரு பொதுத் தேர்தல் நடைபெறுவதைத் தாங்கமாட்டாது. இலங்கைக்கான உதவி வழங்கும் நாடுகள் கூட இத் தேர்தலை அங்கீகரிக்க மாட்டாது.

ஜனாதிபதியும் மக்களினால் தெரிவுசெய்யப்பட்ட ஒருவராக இருப்பதனால் எந்தவித இடையூறும் இன்றி அவர் தனது கடமைகளை நிறைவேற்ற அனுமதிக்க வேண்டும். அதேபோல் ஜனாதிபதியும் பாராளுமன்ற நடவடிக்கைகளுக்கு குந்தகமாக நடந்துகொள்ளக் கூடாது என்றும் அமைச்சர் ரவூப் ஹக்கீம் குறிப்பிட்டுள்ளதுடன் இரு சாராரும் ஒரு உடன்பாட்டுடன் நடந்துகொள்ளவேண்டும் என்றும் கேட்டுக்கொண்டார்.(ம)

### அரசியல்...

என்று சில பாராளுமன்ற உறுப்பினர்கள் தமது கருத்துக்களை வெளியிட்டனர். ஆனாலும் பிரதமர் அவர்களின் கருத்துக்களை ஏற்றுக்கொள்ளவில்லை.

இந் நிலையில்தான் ஜனாதிபதியை விரைவில் சந்தித்துப் பேசப்போவதாக பிரதமர் தெரிவித்துள்ளதுடன் எப்போது பேசப்போகின்றார் என்பது பற்றி திட்டவட்டமான திகதி எதனையும் அவர் குறிப்பிடவில்லை. (ம)

### ஈழத் தமிழர்களை...

வருமாறு:

மனோகரன் (திருமலை), மதி (வேலணை), ராஜ்குமார் (புத்தளம்), தனபாலசிங்கம் யோகேஸ்வரன் (யாழ்ப்பாணம்), சபேஷ், கரிசன் பாஸ்கரன், சுரேந்திரகுமார், பரமேஸ் (யாழ்ப்பாணம்), தயா (அளவெட்டி), செல்வா (வவுனியா), கரன் (மூளாய்), உதயன் (சாவகச்சேரி), ஈசன் (பளை), சதீஸ் (வட்டக்கச்சி), குட்டி (மட்டக்களப்பு), குகன், கேதீஸ்வரன் (யாழ்ப்பாணம்). (ம)

வாடகைக்கு
யாழ்ப்பாணம் சிவன் பண்ணை வீதியில் சிற்றி போய் தையலகத்திற்கு அருகில் உள்ள இரு பெரிய கடைகளும் அதற்குப் பின்னால் உள்ள ஸ்ரோர் அதனுடன் கூடிய சிறிய கடை என்பன வாடகைக்கு உண்டு.
தொடர்பு:-
இராசையா சாவித்திரி
65, சிவன் பண்ணை வீதி,
யாழ்ப்பாணம். (5782)

செல்வச் சந்நிதி கோவில் மாமணி



விக்னா கல்வி நிறுவனம்
A/L DAY CLASS
கலைப் பிரிவு
ECO - திரு. விக்கி - 7-8 மணி, H.C திரு. பத்மராஜா - 7-8மணி
LOG - திரு. சயந்தன் - 7-8 மணி, Drama - திரு. மதி 12-1மணி
Tamil - திரு. குழந்தை - 8-9மணி, CHri - திரு.வசந்தன்-9-10 மணி





- கடந்த 50 ஆண்டுகளுக்கு முன் செல்வச் சந்நிதி கோவில் ஓங்கார நாத ஒலி எழுப்பிக் கொண்டிருந்த மாமணியை மானிப்பாயைச் சேர்ந்த பிரபல வர்த்தகரான செல்லமுத்து சோமசுந்தரம் – நாகேஸ்வரி தம்பதியினர் தங்கள் நேர்த்திக் கடனிற்காக லண்டன் மாநகரில் பெரும் செலவுடன் தயாரித்து அளித்திருந்தார்கள்.
- 1986ல் நடைபெற்ற அனர்த்தங்களால் இம்மாமணி நிர்மூலமாக்கப்பட்டது. தற்போது புலம் பெயர்ந்த தமிழ் மக்களால் இம் மாமணி மீண்டும் லண்டன் மாநகரில் உருவாக்கப்பட்டு தற்போது 54' கோபுரத்தில் ஏற்றப்பட்டுள்ளது.
- எதிர்வரும் 9ம் திகதி காலை 6 - 7.30 மணி வரை வரும் சுபவேளையில் இந்நாத ஒலி மீண்டும் ஒலிக்கப்படவுள்ளது.
- இவ்விழாவில் இந்து கலாசார அமைச்சர் தி. மகேஸ்வரன் அவர்களும், மற்றும் அரசியல் பிரமுகர்களும், சமயப் பெரியார்களும் கலந்து கொள்கின்றார்கள். கொழும்பிலிருந்து தெஹிவளை ஆஞ்சநேயர் ஆலய ஸ்ரீமத் சந்திரசேகர சுவாமிகள் கலந்துகொள்கின்றார். அத்துடன் நல்லை ஆதீன ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாசார்ய சுவாமிகள், செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்களும், விநாசித்தம்பி ஆசிரியர் அவர்களும், யாழ் பல்கலைக்கழக விரிவுரையாளர்களும் கலந்து கொள்கின்றனர்.

**மாமணி நிர்மாண சபை,**
**ஸ்ரீ செல்வச் சந்நிதி ஆலயம்.**


**A/L DAY CLASS**
**கலைப் பிரிவு**

ECO - திரு. விக்கி - 7-8 மணி, H.C திரு. பத்மராஜா - 7-8மணி
LOG - திரு. சயந்தன் - 7-8 மணி, Drama - திரு. மதி 12-1மணி
Tamil - திரு. குழந்தை - 8-9மணி, CHri - திரு.வசந்தன்-9-10 மணி
Geo - திரு. பாபு - 10-11 மணி, Hist - திரு. சுதன் -11-12 மணி
ஆரம்பம் - 07.08.2002 காலை 7 மணி
LOG - திரு.சயந்தன் - சனி, ஞாயிறு 2 மணி
Tam - திரு.குழந்தை - பிரிவு II 3.00 மணி (C/4812)

**விற்பனையாகிறது**

அன்பளிப்புப் பொருட்களுக்கு ஏற்ற கிளாஸ் வகைகள், பிளாஸ்டிக் அலுமினிய, எவர் சில்வர் பொருட்கள், மின்சாரப் பாவனைப்பொருட்கள், சிம்மினி வகைகள், குக்கர் வகைகள், பிளாஸ்க், குளிரூட்டப்பட்ட பிளாஸ்க், லெக்சிப்பேனா, குட்நைட் கொயில், லாம்சேற், J. L. Morison Son & Jones (Ceylon) Ltd. இன் ஏக முகவரான The Peninsula Group இல் மருந்துப் பொருட்கள் அனைத்தையும் மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக் கொள்ளலாம்.



உங்கள் தொடர்புகளுக்கு:
(The) த. பெனின்சுலா குறூப்
127/10, கோயில் வீதி,
நல்லூர், யாழ்ப்பாணம்.
T.P / Fax : 3720



லாம்சேற் :- நீங்கள் உங்கள் வீடுகளை அலங்கரிக்க விரும்பிய வர்ணங்களில், விரும்பிய வடிவங்களில் லாம்சேற்றுக்களை மொத்தமாகவும், சில்லறையாகவும் ஏகமுகவராகிய
**கரசன்ஸ் எலெக்ரிக்கல்ஸ்,**
இல. (4)14, ஸ்ரான்லி வீதி,
(லீடோ சினிமா முன்பாக, யாழ் மாநகர கட்டடம்),
யாழ்ப்பாணம்.
என்னுமிடத்தில் பெற்றுக்கொள்ளலாம்.
T.P 021-3128



இப்பத்திரிகை வலம்புரி அன். கோ ஸ்தாபனத்தினரால் இல.15, வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம் எனும் விலாசத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 07.08.2002ல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.